பக்கங்கள்-16 | 14.வைகாசி.2023 | விலை–50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.

T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -415



## ரணில் ஒரு நரி...அவரின் நரிப்போக்கை காட்டத்தான் செய்வார்

## க.வி.விக்னேஸ்வரன் (பா.உ) – சிறப்பு நேர்காணல்



## வெடுக்குநாறி மலையிலிருந்து தையிட்டிக்கு - நிலாந்தன்




## புலனாய்வாளர்களின் கையில் எந்தவொரு நாடு தங்கியிருக்கின்றதோ அந்த நாட்டை அசைக்க முடியாது



## சரத் வீரசேகரவிற்கு வடகிழக்கு மக்கள் வாய்க்கரிசி போடுவார்கள்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# “ரணில் ஒரு நரி. அவரின் நரிப்போக்கை காட்டத்தான் செய்வார் – சிங்களவருக்கு பாகுபாடு செய்ய முடியாது”

## ஓய்வுபெற்ற நீதியரசரும், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தினப்புயலுக்கு வழங்கிய நேர்காணல்

**கேள்வி :- இன்றைய சமகால அரசியல் பார்வையில், ஏற்கனவே அமுலில் இருக்கின்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை. அதற்கிடையில் புதிதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்கிற இன்னுமொன்றை அரசாங்கம் கொண்டுவரப் பார்க்கின்றது. இதனை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில் :- நான் இதை வித்தியாசமாகப் பார்க்கின்றேன். இலங்கைக்கு பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் தேவையில்லை என்பதே என்னுடைய கருத்து. போர்க்காலத்தில் அரசாங்கம் செய்தவற்றை விடுவோம். ஆனால் போருக்குப் பின்னர் 14 வருடங்கள் கடந்துவிட்டன. அவர்கள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதற்காகக் கொண்டுவருகின்றார்கள் என்றால் தங்களுக்கு எதிரானவர்களை சட்டத்தின் ஊடாக சட்ட நடவடிக்கையின் ஊடாக அவர்களை செயலிழக்கச் செய்வதற்காகத் தான் என்பதுபோல எனக்குத் தோன்றுகின்றது. இதைத் தான் பலரும் கூறுகின்றார்கள். அமெரிக்காவின் இரட்டைக்கோபுரத் தாக்குதலின் பின்னர் தான் எல்லாவற்றையும் பயங்கரவாதம் பயங்கரவாதம் என்று பார்க்க ஆரம்பித்தார்கள். ஒருவர் இன்னொருவரைக் கொலை செய்கின்றார்கள் அது கொலை. இந்தக் கொலையை நாங்கள் எவ்வாறு பயங்கரவாதக் கொலை என்று மாற்றுகின்றோம். அது அரசாங்கம் தான் தீர்மானிக்கவேண்டும். இது கொலையா அல்லது பயங்கரவாதக் கொலையா என்பது தொடர்பாக. அதாவது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வரவேண்டிய கொலையா அல்லது வழக்கமான நாட்டினுடைய குற்றவியல் சட்டத்தின் கீழ் வரவேண்டுமா என்று. அவ்வாறு பார்க்கின்றபோது பயங்கரவாதம் என்பது ஒரு அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தினது திணைக்களங்களால் அடை யாளப்படுத்தப்படும் ஒரு குற்றத்தைத் தான் கூறுகின்றார்கள். ஒரே கொலை. யாரோ ஒருவர் இன்னொருவரைக் கொலை செய்கின்றார். உடனே அதை பயங்கரவாதம் என்று கூறுவது அரசாங்கம். தங்களுக்குத் தேவையில்லாதவர்கள் அதில் ஈடுபட்டிருந்தால் உடனே அது பயங்கரவாதம் என்று கூறுகின்றார்கள்.

புலிகளை அவர்கள் விரும்பவில்லை. ஆகவே புலிகள் என்று கூறுபவர்களைக் கைது செய்தால் அது பயங்கரவாதம். முஸ்லீம் அடிப்படைவாதிகளைப் பிடிக்காவிட்டால் முஸ்லீம்கள் ஏதாவது செய்யப்போனால் அவர்களும் உடனே பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்தப்பட்டுக் கைது செய்யப்படுகின்றார்கள். அதேபோன்று அரகல போராட்டத்தில் சம்பந்தப்பட்ட ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் அவர்களைப் பயங்கரவாதிகள் என்று கூறுகின்றார்கள். ஆகவே அரசாங்கம் எவர் எவரை தங்களுக்கு எதிரானவர்களாகவும் தங்களுக்கு எதிராக அவர்கள் இருந்துவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் இருக்கின்றார்களோ அவர்களை பயங்கரவாதிகள் என்று குற்றம் சுமத்துகின்றார்கள். அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளைத் தான் இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொண்டு வருகின்றார்கள்.

இந்த பழைய பயங்கரவாதத் தடைச்சட்டமோ அல்லது வர விருப்பதாகக் கூறப்படும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமோ எங்களுக்குத் தேவையில்லாத வொன்று. எங்களுக்கு வழக்கமான குற்றவியல் சட்டத்தின் கீழ் இருக்கின்ற ஏற்பாடுகள் போதுமானது. ஆனால் ஒரு பதற்ற நிலைமை ஏற்பட்டால் பொது பாதுகாப்புச் சட்டத்திற்குக் கீழ் ஜனாதிபதிக்குபாதுகாப்புபடையினரை வெளியில் கொண்டுவருவதற்கு அதிகாரம் இருக்கின்றது. அவ்வாறானதொரு கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே சட்டத்திலே இடம் இருக்கின்றது. இந்த நிலையிலே பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது தங்களுக்குத் தேவையில்லாதவர்களை சித்திர வதைப்படுத்தி அவர்களை பலநாட்கள் சிறையில் வைத்து கொடுமைப்படுத்தி அவர்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தத்தான் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

ஆகவே தற்போதைய நிலையிலே எந்தவித பயங்கரவாதத் தடைச்சட்டமும் தேவையில்லை. எங்களுடைய சட்டம் போதுமானது என்பதே என்னுடைய கருத்து. இதே கருத்தினை பாராளுமன்றத்திலே பேராசிரியர் ஜிஎல்.பீரிசுடன் நான் கதைத்துக்கொண்டிருந்தேன். அவர் கூட அதை ஏற்றுக்கொள்கின்றார். அவர் இப்போது எதிர்க்கட்சியில் இருப்பதால் ஏற்றுக்கொள்கின்றாரோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர் ஒரு சட்ட வல்லுனர். நன்றாக சட்டம் படித்தவர். அவருடைய சட்ட அறிவை மதிப்பவர்கள் நாங்கள். அந்த வகையிலே தற்போதைய நிலையில் எங்களுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் எதுவுமே தேவையில்லை என்கிற கருத்துடன் தான் அவரும் இருக்கின்றார். ஆகவே நாங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்று எதுவுமே தேவையில்லை என்ற அடிப்படையில் எமது போராட்டங்களை நடத்தவேண்டும். அத்துடன் ஐ.நாவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கச் சொல்லி யிருக்கின்றார்கள். அதிலும் பார்க்க கொடூரமான இன்னுமொரு சட்டத்தைக் கொண்டுவருவதில் எந்தவித நன்மையும் இல்லை. ஆகவே தற்போதைய நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் என்று எதுவுமே தேவையில்லை என்பதே என்னுடைய கருத்தாக இருக்கின்றது.

**கேள்வி :- ஆயுதக் கட்சிகளுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஜேவிபியினரின் கலவரக் காலகட்டத்தின் போதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது நீங்கள் கூறியது போன்று யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் நிறைவடைந்துவிட்டபோதிலும், மீண்டும் போராட்ட சுதந்திரம், ஊடக சுதந்திரத்தை குறிவைக்கின்ற அளவுக்கு இந்த அரசாங்கம் வருவதற்கு, இந்த அரகல போராட்டமும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றதே?**

பதில் :- அரகல போராட்டம் நடைபெற்றபோது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அப்போதைய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. ஆனால் எடுத்திருக்கலாம். மக்களது சிந்தனைகள் எவ்வாறு இருக்கின்றது என்பது தெரியாமல் அப்போதைய ஜனாதிபதி அது குறித்துச் சிந்திக்கவில்லை. நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. புதிய ஜனாதிபதி அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரல்லாது சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக சட்டப்படி அவர் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார். ஆகவே அவர் தனக்கு எதிராக கிளர்ந்தெழுபவர்களுக்கு எதிராக பாவிக்கவேண்டும் என்ற எண்ணத்திலே இதைக் கொண்டுவரக்கூடும். ஆனால் எது எவ்வாறானவிருப்பினும் அவராக இருந்தால் என்ன வேறு எவராக இருந்தால் என்ன. இலங்கைக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையில்லை என்பதே என்னுடைய கருத்து.



**கேள்வி :- ஏற்கனவே இருந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கும் கொண்டுவரவிருப்பதாகக் கூறப்படும் சட்டத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் என்ன?**

பதில் :- வேறுபாடுகள் இருக்கின்றது. பொலிசாருக்கு புதிய சட்டத்தில் அதிகாரங்கள் அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதுவல்ல முக்கியம். யார் இறுதியாக ஒருவருடைய நடவடிக்கையை பயங்கரவாதம் என்று கணிக்கின்றார்களோ அதுவே முக்கியம். ஆகவே இவர்கள் எல்லோருக்கும் எந்தெந்த அதிகாரங்களைக் கொடுத்து நீங்கள் அதிலே நடவடிக்கை எடுங்கள் என்று கூறினால் அவர்கள் தங்களுக்குத் தேவையானவர்களை பயங்கரவாதத்திற்கு எடுப்பார்கள். அரசாங்கத்திற்குத் தேவை யில்லாதவர்களைபயங்கரவாதத்திற்கு எடுப்பார்கள். இங்கு பயங்கரவாதம் என்று ஒன்றுமில்லை. யார் யாருக்கு எதிராக உள்ள தங்களது எண்ணங்களை வலுப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்துவதற்கு பாவிக்கும் ஒரு சட்டமாகத்தான் இது வந்துகொண்டிருக்கிறது. இந்தச் சட்டத்திலோ அல்லது அந்தச் சட்டத்திலோ அதை வேறுபடுத்திக்காட்டவேண்டிய அவசியம் இல்லை.

**கேள்வி :- தொல்பொருள் திணைக்களம் என்கிற பெயரில் காணிகள் சுவீகரிக்கப்படுவதும், வணக்கஸ்தலங்கள் கைப்பற்றப்படுவதும் தொடர்கின்றது. அதற்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்பவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். இது எந்த அடிப்படையில் நடைபெறுகிறது?**

பதில் – இதை நான் வேறு விதமாகப் பார்க்கின்றேன். அரசாங்கம் தற்போது தமிழ் மக்களிடையே இருந்து இவ்விதமான பதற்ற நிலைகள் கோரிக்கைகள் உரிமைகளுக்காக போராடக்கூடிய சந்தர்ப்பத்தை அறிந்தால் தமிழ் மக்கள் கஸ்டப்படுகிறார்கள். தமிழ் மக்களுடைய உரிமைகள் தேவையாக இருப்பதை ஜனாதிபதி அறிந்திருக்கின்றார். இந்த நிலையில் இவ்வாறான விடயங்களைச் செல்லவிட்டால் தமிழ் மக்களுடைய தலைவர்களும் தமிழ் மக்களும் அதிலேயே தங்களுடைய கரிசனைகளைக் காட்டிக்கொண்டிருப்பார்கள். தங் களுடைய உரிமைகள் தொடர்பாக பேசிக்கொண்டிருக்கமாட்டார்கள் என்கிற காரணத்திற்காக இவ்வாறான நிலைமைகளை அரசாங்கம் ஏற்படுத்தி வருகிறதோ என்பது என்னுடைய சந்தேகம். தொல்பொருள் திணைக் களத்திற்குக் கூட சரித்திரம் சரியாகத் தெரியவில்லை. அண்மை யில் காலைக்கதிர் ஆசிரியர் தலையங்கத்திலே ஜனாதிபதி உண்மையில் இலங்கையினது சரித்திரத்தை எழுதுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்கள். அது உண்மை. இலங்கையினது சரித்திரத்தை அறியாதவர்கள் தான் தொல்பொருள் திணைக்களத்தினர் பிழையான நடடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். முறையான அறிவு அவர்களுக்கு இருந்தால் இதைச் செய்யமாட்டார்கள். காரணம் என்னவென்றால் இந்து மதக் கோவில்களை உடைத்து சிதைத்து சின்னாபின்னப்படுத்துவது ஒருபுறமிருக்க. அந்த இடத்தில் முன்னர் ஒரு பௌத்த கோவில் இருந்திருக்கக்கூடும்.

**தொடரும்...**

**நேர்காணல் – இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## பௌத்தமயமாக்கலும், உரமூட்டப்படும் இனவாதமும்

தமிழர் வாழ் பிரதேசங்கள் தொடர்ச்சியாக சிங்கள பௌத்த தேரர் களாலும், அவர்களுக்கு உடந்தையாக இருக்கும் தொல்லியல் திணைக்களம் மற்றும் முப்படைகளாலும் பௌத்தமயமாக்கலுக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகி வருகின்றது. இந்து சமய மக்களின் வழிபாட்டிடங்கள், ஆரம்பத்தில் மன்னர்களால் உடைக்கப்பட்டு முற்றாக இல்லாமலாக்கப்பட்டு பாரிய அழி வொன்றினைச் சந்தித்தது போல, இன்று பௌத்தர்களால் திட்டமிட்டு சைவ ஆலயங்கள் அழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர் வாழும் பிரதேசங்கள் எங்கிலும் பௌத்த விகாரைகளை நிறுவி, இதுவொரு சிங்கள பௌத்த நாடு என்பதை முழு உலகிற்கும் பறைசாற்றுவதே அரசின் நிகழ்ச்சிநிரல். அதற்கு உடந்தையாக இருப்பவர்கள் தான் இந்த பௌத்த தேரர்களும் பொலிசாரும். கிழக்கில் முஸ்லீம் மக்கள் வாழும் இடங்களும் இன்று பறிபோகும் அபாயத்தில் உள்ளது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு இருந்த காலத்தில் பௌத்த விகாரைகள் இருந்தபோதிலும், பௌத்தமயமாக்கல் விரிவுபடுத்தப்படவில்லை.

முப்படைகளையும் தன்னகத்தே கொண்டு ஆயுத ரீதியாக பலம்பெற்றிருந்த விடுதலைப்புலிகளை இந்த விடயத்தில் அரசால் அசைத்துப்பார்க்க முடியவில்லை. ஆனால் இன்று தமிழ் மக்களது ஆயுதப் போராட்டங்கள் வடக்கு கிழக்கில் மௌனிக்கப்பட்டிருக்கும் சூழலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் அரசு, தமது கைக்கூலிகளைக் கொண்டு, பெருமளவில் வடக்கு கிழக்குக்கு முப்படைகளை அனுப்பி முகாம்களை நிறுவி, உயர்பாதுகாப்பு வலயங்கள் என்கிற போர்வையில், பௌத்த விகாரைகளை கட்டி வருகின்றனர். அன்று விடுதலைப்புலிகளால் அரச நிகழ்ச்சிநிரலைத் தடுக்க முடிந்தது. இன்று எம்மத்தியில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமையின்மையாலும், அரசுடன் ஒட்டி உறவாடும் தமிழ்த் தரப்பினராலும் எதனையும் தடுக்க முடியவில்லை. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, அரசிற்கு ஆதரவு வழங்குவதும், பின்னர் எதிர்ப்பதும், பேச்சுவார்த்தை மேசைகளில் பங்குகொள்வதும் என நாடக அரசியலைச் செய்து வருகின்றனர். தந்தை செல்வநாயகத்திடம், மறைந்த அஷ்ரப் போன்றோரிடம் இருந்த உறுதியான சமூகப்பற்றுள்ள அரசியலை இன்றைய தமிழ் - முஸ்லீம் அரசியல்வாதிகளிடம் காண முடியவில்லை.

மறுபக்கத்தில் இனவாதம் பேசிப்பேசி இந்த நாட்டில் போராட்டங்களை உண்டாக்கி மூவின மக்களையும் சிதைத்தவர்களால், இன்றும் இனவாதம் தான் பேச முடிகின்றது. தர்மத்தினைப் போதித்த பௌத்த மதம், இன்று அதர்மத்தின் வழியில் பயணிப்பதைக் காணமுடிகிறது. பௌத்த தேரர்கள் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை, பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் அரசிற்கு அழுத்தம் கொடுப்பவர்களோ அல்லது தமிழ் மக்கள் முன் வந்து பேசுவதற்கோ தயாராக இல்லை. அவர்கள் நாம் பெரும்பான்மையாக இருக்கிறோம். இதுவொரு சிங்கள பௌத்த நாடு என்கிற மமதையில், உடல் முழுவதும் இனவாத சிந்தனைகளை வரித்துக்கொண்டு, நாட்டின் முன்னேற்றத்திற்கு, நல்லிணக்க முயற்சிகளுக்கு, ஜனநாயக விழுமியங்களுக்கு முரணாகவே செயற்பட்டு வருகின்றனர்.

இனவாத சிந்தனைகள், பௌத்த மேலாதிக்க போக்கில் மாற்றம் ஏற்படாமல் இந்த நாட்டில் நல்லிணக்கத்தையும், ஜனநாயகத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் நாம் காண முடியாது. மாறாக, மூவின மக்களுக்குள் இனமுறுகலும், குழப்பங்களுமே ஏற்படும்.



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

# கல்லறைப் பூக்கள்

16




இண்டைக்கு நேரத்தோட முகாமுக்குப்
போனால், ஜீயஸ்ஸூக்கிட்ட குடுப்ப
அட்டைப் பதிய கடிதம் எடுக்கலாம்"
"கட்டாயம் அதை செய்யீங்க ஐயா"
"தம்பி போயிட்டு வரட்டா?"
"ஓம் கவனமா போயிட்டு வாங்க"

காலை வேளையில், பக்கத்து
தென்னமரத்திலிருந்து குயில்கள்
கூவுகின்றன. வீட்டுச் சூழலில் மா
மரங்கள் பூத்தும் காய்த்தும் கனிந்தும்'
புதுப்பொலிவுடன் சிரித்து நின்றன.
பறவைகள் அக் கனிகளைச் சுவைத்து
உல்லாசமாக வானில் சஞ்சரித்தன.
வேலியோரத்தில் உள்ள முள்முருக்கு
மரங்களில் பூத்த பூத்தொகுதிகளில் தேன்
சிட்டுக் குருவிகள் சுற்றி சுற்றி வட்டமிட்டன.
தனக்குத் தெரிந்த பாணியில் கமலி
அடுக்களையில் காலை உணவிற்காக
ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தாள்.
கனகர் தோட்டத்தில் புற்களை
வெட்டிக்கொண்டிருந்தார். சாத்
முற்றத்தில் ஒரு கதிரையில் அமர்ந்தவாறு
பல்கலைக்கழகத்திற்காக விண்ணப்பப்
படிவத்தை நிரப்பிக்கொண்டிருந்தான்.
நாளை மலரப் போகும் புத்தாண்டு
இவர்களின் அன்றாட வாழ்வில் எந்த
மாற்றத்தையும் உண்டு பண்ணவில்லை.
பல வருடங்களாகியும் பாக்கியத்தின்
ஞாபகங்கள் அவர்களை வாதை செய்தன.
அவ்வேளையில்
"டீங்...டீங்...டீங்..." தபாற்காரன் வீட்டுப்
படலையில் துவிச்சக்கர வண்டி மணியை
அடித்தான்.
"ஏய் பிள்ளை 'கேட்'ல்ல தபாற்காரன்
வந்திருக்கான் போல போய் என்னன்னு
பாரு" கனகர் தோட்டத்தில் நின்றவாறு
மகள் கமலிக்குக் கட்டளையிட்டார்.
"போறன் அப்பா" - கமலி செவிசாய்த்தாள்.
"இந்தாங்க செல்வி கனகர். கமலி யாரு?"
"நான்தான்"
" 'றெஜீஸ்டர் போஸ்' கல்வி அமைச்சில்
இருந்து வந்திருக்கு. இந்தாங்க இந்த
இடத்தில் கையெழுத்துப் போடுங்க"
ஒரு பேனையையும் சிறிய குறிப்புப்
புத்தகத்தையும் நீட்டினான், தபாற்காரன்.
கமலி அதைப் பெற்று கையொப்பமிடும்
வேளையில் அந்த இளம் தபாற்காரனுக்கு
அவளை எங்கோ முன்னரே
பார்த்ததுப்போல இருந்தது?.
"இந்தாங்கோ கையொப்பம் போட்டாய்ச்சு"
"உங்களை இதற்கு முன்னம் எங்கையோ
பாத்திருக்கன்?. சரியா ஞாபகம்
வருதில்லை. சரி...சிரி... ஞாபகம்
வந்திருச்சி நீங்கள் யோகபுரம் முகாமில்
இருந்தனீங்களா?"
"ஓம்"
"எப்ப இஞ்ச வந்தனீங்க?"
"வந்து ஒரு வருசமாச்சி..."
"எப்பிடி இந்த மண் நல்ல மண்ணா?"
"நல்ல மண்" - ஒரே பதில்.
"நீங்க என்ன செய்றீங்க?"
"ஸ்கூல் படிப்பு முடிச்சிட்டு மேல்
படிப்புக்கு வெயிட்டீங்"
"இப்படிதான் நானும் 'ஓயல்,
ஏயல்' எல்லாம் முடிச்சிட்டு வீட்ட
இருந்தனான். 'வெயீட்டீங் லிஸ்டில்'
எனக்கு 'லிங்குஸ்டீக் ஸப்யக்டுக்கு'க்
கிடைச்சிச்சு. யாழ்ப்பாணத்தில் ஒரே
'ஆமி' பிரச்சினையாக இருந்தமையால்,
அப்பா, அம்மா என்னை 'கெம்பஸூக்கு'
அனுப்பல்ல. அதோட நானும் 'போஸ்
மேன்' வேலைக்கு விண்ணப்பம்
போட்டிருந்தனான். ஒரு வருசத்தால் அது
வந்ததும் வேலைக்குப் போயிற்றன்..."
தபாற்காரன் திடீரென்று அவள் மீது
ஒருதலைக் காதல் கொண்டு, தன்னை
மறந்து கதைத்துக்கொண்டிருந்தான்.
"கடித்தைத் தாங்க, சும்மா
படலையிலிருந்து கதைத்துக்
கொண்டிருந்தா? அப்பாவும் அண்ணாவும்
பேசுவாங்க"
முன்னம் பின்னம் அறியாத தபாற்காரன்,
பாதுகாப்பிற்காக அறுத்துவிட்டு ஓடிய
பல்லியின் வால் துண்டு போல அலட்டிக்
கொண்டிருப்பதை ஊதாசீனம் செய்தாள்.
" 'சொறி' நான் கனக்க கதைச்சிட்டன்
போல, கோவிச்சிக்காதிங்க" - துவிச்சக்கர
வண்டியின் கைப்பிடியில் கொழுவியிருந்த
சிந்தாமணி பையிலிருந்து கடிதத்தை
எடுத்து நீட்டினான்.
அவளும் அதை வெடுக்கென வாங்கிக்
கொண்டு, "இனி கடிதம் எனக்கும்
அண்ணாச்சிக்கும் (தனது அண்ணாவை
செல்லமாக அண்ணாச்சி என்று
அழைப்பாள்) அடிக்கடி வரும் கொண்டு
வந்து தாங்கோ" - கடிதத்தை வாங்கிக்
கொண்டு திருப்பும் போது, அவள் எதிரே
தந்தை கனகர் தோளில் மண்வெட்டியுடன்,
"என்ன கடிதம் கமலி?" கேட்டார்.
"கல்வி அமைச்சுக் கடிதம்"
"நான் நினைச்சனான் பாக்கியம் பற்றி,
மனித உரிமை அமைப்பு இல்லாட்டி
காணாமல் போனவர் அமைப்புக்கிட்ட
இருந்து ஏதோ தகவல் வந்திருக்கென்று"
"அம்மாவுக்கு இவ்வளவு வருசமாக
என்னவாச்சோ, பாவம். இந்த நாட்டில்
மனித உரிமை எங்க இருக்கு? அப்பா.
சுதந்திரம் அடைந்ததில் இருந்து
இனத்துக்கு இனம் மாறி மாறி
அடிச்சுக்கொண்டு எத்தனையோ உயிர்கள்
செத்தும் காணாமலும் போயிற்று."
"உடையேன் பாப்பம் என்ன விஷயம்
என்று?"
"வீட்ட வாங்க உடைச்சுப் பாப்போம்"
"அப்படி என்ன புள்ளை ரகசியம்
எழுதியிருக்கப் போறாங்கள்? தபாற்கார
தம்பியும் பார்க்கட்டும்.
அது சந்தேஷப்படுந்தானே தான் கொண்டு
வந்த கடிதத்தில் நல்ல விடயம் இருந்தா?"
"அவருக்கு எல்லாம் தெரியும்" - கையில்
கடிதத்துடன், சிற்பியால் உளி கொண்டு
செதுக்கப்பட்ட சிலையைப் போல
பூமாதேவியின் மீது பாதமலர்களைப்
மெதுவாகப் பதித்து வீடு நோக்கி
நகர்ந்தாள். தபாற்காரனின் பருவப்
பார்வையில் சற்றும் மாற்றமில்லை.
"அப்படித்தான் இந்த புள்ளை கதைக்கும்.
தம்பி செல்லமாய் வளர்த்துப் போட்டன்."
தனது தோட்ட மண்வெட்டியின்
பின்புறத்தில் ஒட்டியிருந்த களி மண்ணை
ஒரு கம்புக் குச்சியில் தட்டயவாறு
மொழிந்தார்.
"அப்படி ஒன்றும் அவுங்க குறையா
கதைக்கவில்லை. பரவாயில்லை" - தனது
பார்வையில் சற்றும் மாற்றத்தை உண்டு
பண்ணாமல்.
"தம்பி இந்த ஊரா?"
"ஓம், ஏன்?"
"இல்லை தம்பி மிலேனியம் பிறந்து
பல மாதங்களாப் போச்சு. இஞ்ச
உள்ள மக்களுக்கு காற்று, நீர், உணவு
கிடைத்தாலும் சுகாதாரம், பாதுகாப்பு,
வாழ்விடம், போக்குவரத்து, கல்வி,
இல்லிடம் போன்ற அத்தியாவசிய
தேவைகள் ஒழுங்கா கிடைக்கவில்லை.
இருந்தாலும் பரவாயில்லை இங்கு உள்ள
மக்கள் எங்கட இடத்தில் மாதிரி ஆடம்பரத்
தேவைக்கு அடிமையாகவில்லை. தம்பி,
நான் உன்னை மினக்கடுத்திக்கொண்டு
இருக்கன். நீயும் வேற இடத்துக்குக் கடிதம்
கொடுக்கணும் சரி போயிட்டுவா..."
"பரவாயில்லை, உங்களுக்கு நல்ல தேன்
வேணும் என்றா சொல்லுங்கோ, எங்கட
அப்பா தேன் எடுத்து விக்கிறவர். பின்னேரம்
வேலை முடிஞ்சு போயிட்டு கொண்டுவந்து
தாறன்."
"நானும் மருந்துக்குத் தேடினான். நல்லதா
போச்சி. கொண்டு வா தம்பி. ஒரு போத்தில்
என்ன விலை?"
"இருநூற்று ஐம்பது ரூபாய்க்கு விக்கிறவர்.
உங்களுக்கு இருநூறு ரூபாய்க்கு கொண்டு
வந்து தாறன்"
"பிள்ளைகளுக்கு வயிற்று வலி, இருமல்
எதும் வந்தால், கட்டாயம் வீட்டில் இருக்க
வேணும்"
தபாற்காரனின் முகம் சூரியனைக் கண்ட
சூரியகாந்திப் பூவைப் போல மலர்நதது.
மாலையில் மீண்டும் ஒரு தடவ கமலியின்
இல்லத்திற்கு வரப்போவதை எண்ணி பல
பகற் கனவுகளுடன் துவிச்சக்கர 'பாரில்'
இருந்து எழுந்து ஆசனத்தில் அமர்ந்து,
தன்னை மறந்து பயணமானான்.

இரண்டாயிரம் ஆண்டில் உள்
நாட்டுப்போர் சூடு கண்டிருந்தது. ஒரு
மணித்தியாலயத்தில் போகக் கூடிய
யாழ்ப்பாணத்திற்குப் பல மாதங்கள்
எடுக்கும். மாங்குளத்திலிருந்து
யாழ்ப்பாணம் போவதென்றால்,
முல்லைத்தீவு மாவட்டத்தில் 'அ கூடு
முதல் ஔ னா கூடு' வரை போக
வேண்டும். வவுனியா சோதனைச்
சாவடியில் தலையாட்டியிடம்
இருந்து தப்பித்துப் போக வேண்டும்.
திருக்கோணமலைக்குச் சென்று
கப்பலுக்கு நாள் கணக்கில் தமிழ் அரசியல்
அடிவருகளின் பாதங்களில் பணிந்து
தவமிருக்க வேண்டும். மூன்று நான்கு
மாதங்களில் யாழ்ப்பாணம் வந்தாலும்
'ஆமி ஐஸி' எடுக்காம வெளியில் இறங்க
முடியாது.
தாயின் சேமிப்பு பழமொழி சாத்துக்குக்
உற்சாகம் கொடுத்தது. பல இடர்களுக்கு
மத்தியில் திருக்கோணமலையில் கப்பல்
ஏறியவனுக்கு மாங்குளத்திலிருந்து
ஓமந்தை சோதனைச்
சாவடிக்கும் ஓமந்தையிலிருந்து
வவுனியாவிற்கும் வவுனியாவிலிருந்து
திருக்கோணமலைக்னுகும்
திருக்கோணமலையிலிருந்து
காங்கேசன்துறைக்கும்
காங்கேசன்துறையிலிருந்து
யாழ்ப்பாணத்திற்கும்
யாழ்ப்பாணத்திலிருந்து திருநெல்வேலியில்
உள்ள பல்கலைக்கழக விடுதிக்கும்
பயணித்த அநுபவங்கள் கற்றுத்
தந்த பாடங்கள் ஏராளம் அவன் ஒரு
வருடக்காலத்தில் பகிடிவதையால் கண்ட
அநுபவங்களும் ஏராளம்.
தந்தையிடமும் தங்கையிடமும் அன்று
அதிகாலை விடை பெற்றுக்கொண்ட
சாத் தனக்கு தேவையான
பொருட்களைப் பொதி செய்து கொண்டு,
மாங்குளத்திலிருந்து ஓமந்தை சோதனைச்
சாவடியை நோக்கி, செல்வதற்காக
ஆயிரம் ரூபாய்க்கு 'எம்டி நைண்டி பைக்'
ஒன்றைச் சாரதியுடன் வாடகைக்கு 'புக்'
பண்ணியிருந்தான். 'பைக்' வீட்டுவாசலின்
நின்று கொண்டு 'கொர்ண்' ஒலியை
எழுப்பியது.
"தம்பி கெதியா ஓடிவாங்கோ
பொடியள்ட 'பொயிண்டையும்'
ஆமிண்ட 'பொயிண்டையும்' தாண்டி
போவதுயென்றால், அறுந்த பட்டத்தின்
நூலை பாய்து பிடிக்கின்ற மாதிரி"
"இந்தா வந்திட்டன் அய்யா?"
"கொஞ்சம் விரைவு படுத்து தம்பி.
உன்னை ஓமந்தை ஆமி பொயிண்டுக்கு
அங்கால விட்டுப் போட்டு, பெறு மாத
புள்ளத்தாச்சி இந்திராணியை கிளிநொச்சி
'கொஸ்பிட்டலுக்கு'க் கூட்டிக் கொண்டு
போக வேணும். கெதியா வற வேணும்"
"ஏன் அய்யா, கர்ப்பிணித்தாயை முதல்ல
விட்டுட்டு வந்திருக்கலாமே?"
"அவள் சூரியன் சுட்டவுடன்தான்
எழும்புவாள். நீ தூர இடம் போகிறாய்.
அதோட நேற்று ஓமந்தைப் பொயிண்டில்
துப்பாக்கி சத்தமும் கேட்டது. நேரத்திற்கு
உன்னை இறக்கி விட்டா எல்லாத்துக்கும்
நல்லது. போன கிழமை பக்கத்து வீட்டு
தங்கவேலு சைக்கிள்ள வவுனியாவுக்கு
கச்சான் கட்டிக்கொண்டு போகேக்க
ஆமிக்கும் பொடியளுக்கும் இடையே
'பயரீங்' நடக்கேக்க இடையில்
மாட்டுப்பட்டு, காலில் காயப்பட்டு சூனிய
பிரதேசத்தில் மூன்று நாள் உயிருக்குப்
போராடிக் கொண்டு கிடந்து, நான்காம்
நாள்தான் சர்வதேச செஞ்சுலுவை
சங்கம் தலையிட்டு...

தொடரும்...

# வெடுக்குநாறி மலையிலிருந்து தையிட்டிக்கு - நிலாந்தன்



தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். போலீசாரோடு முரண்பட்டதன் மூலம் அதை உணர்ச்சிகரமான ஒரு விவகாரமாக மாற்றியதும் அந்தக்கட்சிதான். அதன் விளைவாகத் தமிழரசுக்கட்சியும் உட்பட ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பகுதிக்கு வரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நீதிமன்றம் தலையிடும்ஒருநிலைமைஉருவாகியது.

எனினும் போராட்டம் பெருமளவுக்கு கட்சிப் பிரமுகர்களின் போராட்டமாகவே இருந்தது. கொஞ்சம் தொண்டர்களும் காணப்பட்டார்கள். முன்னணி போலீசாரோடு முரண்பட்டதுங்கூட அதன் பாணியில் வளமையானது என்று சொல்லலாம். அரச படைகளோடு முரண்படுவதை ஒரு சாகசமாக முன்னணி செய்து வருகின்றது. இதுபோன்ற போராட்டங்களில் அவ்வாறான சாகசச் செயலுக்கும் ஒரு பொருள் உண்டு. அது போலீசாரை நிதானமிழக்கச் செய்யும். அதன் தக்கபூர்வ விளைவாக சிங்கள பௌத்தமயமாக்கல் மேலும் அம்பலப்படும் என்பது உண்மை. ஆனால் அறவழிப் போராட்டங்கள் மட்டுமல்ல ஆயுதப் போராட்டங்களும் சாகசங்களால் வெற்றி பெறுவதில்லை.

இது விடயத்தில் சில அடிப்படையான கேள்விகள் உண்டு. அந்த விகாரை திடீரென்று வானத்திலிருந்து தரைக்கு வரவில்லை. அது கடந்த நான்கு வருடங்களாக கட்டப்பட்டு வருகிறது. அதற்கு அத்திவாரம் வைத்தபோதே அது விவகாரம் ஆக்கப்பட்டது. அதைக் கட்டியெழுப்பும் வரையிலும் ஏன் தமிழ்க்கட்சிகள் பார்த்துக்கொண்டிருந்தன? இப் பொழுதும் விகாரை முழுமையாக திறக்கப்படவில்லை. அதற்கு கலசம் வைக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட பொழுதுதான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி களத்தில் இறங்கியது. நாவற்குழியிலும் அப்படித்தான்.

இதில் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அத்திவாரம் வெட்டப்படும் பொழுதும் அதைத் தடுக்க முடியவில்லை. அது கட்டி முடிக்கப்படுவதையும் தடுக்க முடியவில்லை. அது ஒரு மதம் சார்ந்த பொதுக்கட்டிடம் என்ற அடிப்படையில் அதை இனி அகற்றுவது மேலும் விவகாரமாகிவிடும். எனவே இங்கு தொகுத்துப் பார்த்தால் தெரிய வருவது எனவென்றால், தமிழ்க்கட்சிகளின் இயலாமைதான். தமிழ்க்கட்சிகளின் நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியல்தான்..(Event based)

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்ட பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கு போனார். முரண்பட்டார். அது போலவே தையிட்டி விகாரை விவகாரத்திலும் தொடக்கத்திலேயே அது பிரதேசசபையில் பிரஸ் தாபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது விடயத்தில் 5 ஆண்டுகள் தூங்கிக் கிடந்துவிட்டு திடீரென்று விழித்த அரசியலை எப்படிப் பார்ப்பது ?

ஆயிரம் விகாரைகள் கட்டப் போவதாக ரணில் பல ஆண்டுகளுக்கு முன்பே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். அவர் சொன்னதைச் செய்கிறார். அது அரசுடைய தரப்பு. திணைக்களங்கள் அவர்களுடைய உபகரணங்கள். படைத்தரப்பு அதன் காவல்காரன். எனவே எல்லா வளங்களையும் கொட்டி அவர்கள்சொன்னதைச்செய்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு சொன்னதைச் செய்யும் சக்தி உடையவர்களா? அதற்குத் தேவையான நீண்டகால நோக்கிலான வழிவரைபடம் அவர்களிடம் உண்டா?இல்லையென்றபடியால்தான் அவர்கள் நிகழ்வுகளை மையமாக வைத்து எதிர்ப்பு அரசியல் செய்கின்றார்களா? அவர்கள் எதிர்த்த போதிலும் விகாரைகள் .தாதுகோபங்கள் கட்டப்பட்டு கொண்டேயிருக்கின்றன.

தமிழ்க்கட்சிகளிடம் தெளிவான வழிவரைபடம் இல்லை என்பதைத்தான் தையிட்டி விவகாரம் நமக்கு உணர்த்துகின்றது. சிங்கள பௌத்தமயமாக்கல் என்பது, தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதைச் சிதைக்கும் நோக்கிலானது.எனவே தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரண்டால்தான் அதைத்தடுக்கலாம். செல்வராஜா கஜேந்திரன் தையிட்டியில் வைத்து அதைச் சொன்னார். ஆனால் சொன்னால் மட்டும் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு யார் தடை?

ஏனைய கட்சிகளைத் துரோகிகள், ஒட்டுக்குழுக்கள், கைக்கூலிகள் என்றெல்லாம் கூறிக்கொண்டு எப்படி ஒற்றுமைப்படுவது? இனி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவர முடியாது. ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு பிரதான நீரோட்ட கட்சியாக வளர்ச்சிபெற வேண்டும். அல்லது ஏனைய கட்சிகள் தாங்கள் ஒரு பெரிய கூட்டாக வளர்ச்சி பெறவேண்டும்.

எந்தக் கூட்டாக இருந்தாலும் அது தேசத்தை கட்டியெழுப்புவது என்ற நோக்கத்தோடு உரு வாக்கப்படவேண்டும். நிச்சயமாக தேர்தல் வெற்றிக்கான கூட்டாக இருக்கக்கூடாது. அத்தகைய அடிப்படையில் கூட்டுக்களை உருவாக்கத் தவறியதன் விளைவாகத்தான் தேச நிர்மானத்திற்கான அடுத்தடுத்த கட்டவளர்ச்சிகளுக்குப் போக தமிழ் அரசியலால் முடியவில்லை.

தேசத்தை எப்படிக் கட்டியெழுப்புவது என்று சிந்தித்து அதற்குரிய வழிவரைபடத்தைத் தயாரித்து இருந்திருந்தால், சிங்கள பௌத்தமயமாக்கலை எதிர்கொள்வதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கி யிருந்திருப்பார்கள். கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான், நிகழ்வுகளை மையமாகக்கொண்டு எதிர்ப்பு அரசியல் செய்யவேண்டி வந்தது. அதை ஒரு சட்டவிவகாரமாகச் சுருக்கவேண்டி வந்தது. இது ஒரு சட்டவிவகாரம் அல்ல. இது ஒரு அரசியல் விவகாரம். இதை அணுகுவதற்கு அரசியல் ரீதியான கட்டமைப்புகளை உருவாக்கவேண்டும். ஒரு கட்சியிடமும் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லை என்பதைத்தான் தையிட்டியில் குந்திக்கொண்டிருந்த நாடாளுமன்றஉறுப்பினர்கள் நமக்கு உணர்த்தினார்கள். சில தொண்டர்களைத் தவிர மக்களை அங்கே கொண்டுவர முடியவில்லை.

எனவே இங்கு தேவையானது என்னவென்றால், தேசத்தை நிர்மாணிப்பதற்குரிய கட்டமைப்புகள் எவை எவை என்று கண்டு அவற்றை கட்டியெழுப்புவதுதான். இது பல ஆண்டுகளாக நான் எழுதிவரும் ஒரு விடயந்தான். ஒரு தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான கட்டமைப்புகள் எவையெவை? ஒரு மக்கள்கூட்டத்தைத்தேசமாகவனையும் அம்சங்களைப் பலப்படுத்துவதற்குரிய கட்டமைப்புக்களே அவை. ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்கள் எவை?

நிலம், மொழி, இனம் அல்லது சனம், பொதுப் பண்பாடு, பொதுப் பொருளாதாரம் போன்றவைதான். எனவே மேற்கண்ட அம்சங்களை பலப்படுத்தவும் பாதுகாக்கவும் தேவையான சுயகவசங்கள் என்று வர்ணிக்கத்தக்க கட்டமைப்புகளை புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் பங்களிப்போடு உருவாக்கலாம். தேசத்தைநிர்மாணிக்கவேண்டும்என்று கூறும் ஒரு கட்சி அதற்கு தேவையான பொருத்தமான கட்டமைப்புகளை ஏன் இதுவரை உருவாக்கவில்லை?அதற்கு பதில் வேண்டும்.

தையிட்டியில் தமிழ் மக்கள் ஒரு தேசமாக நிற்கவில்லை. கட்சிப் பிரமுகர்கள்தான் நின்றார்கள். அது ஒரு நிகழ்வு. அதுபோல பல நிகழ்வுகளை நாங்கள் கடந்த 14 ஆண்டுகளில் கண்டுவிட்டோம். நிகழ்வுகளை மையமாகக்கொண்ட அரசியலின் தோல்வியே இது. இப்பொழுது தேவையாக இருப்பது மூலோபாய ரீதியில் சிந்தித்து கட்டமைப்புகளை உருவாக்கி நீண்டகால அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்புவதுதான். அவ்வப்போது நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்றும் அரசியல் எனப்படுவது தேசத்தை நிர்மாணிப்பதற்குஉரியதல்ல.தேசத்தை நிர்மாணிப்பது என்பது எதிர்ப்பு அரசியல் மட்டுமல்ல. அது கட்டியெழுப்பும் அரசியலுந்தான் (Constructive). எதைக் கட்டியெழுப்புவது? எதிர்க்கத் தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புவது.

இன்றைக்கு தையிட்டி. நாளைக்கு வேறொரு இடத்தில் வேறு ஒரு பௌத்த மதக் கட்டுமானத்துக்கு அத்திவாரம் வைக்கப்படும். அப்பொழுதும் அந்த நிகழ்வுக்கு எதிராக தமிழ்க்கட்சிகள் போராடக் கூடும். வழக்குத் தொடுக்கக்கூடும். போலீசோடுதள்ளுமுள்ளுப்படக்கூடும். வழக்கில் வெல்லவும் கூடும். ஆனால் அவை யாவுமே நிகழ்வுகள் தான். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தொடர் செயற்பாடுகளாக இருக்கப்போவதில்லை. சிங்கள பௌத்தமயமாக்கலைத் தடுக்கப்போவதில்லை.

இப்பொழுது வெடுக்குநாறி மலையில் இருந்து கவனக்குவிப்பு தையிட்டிக்குத் திரும்பிவிட்டது. அதுகூட சிங்கள பௌத்தமயமாக்கலுக்குச் சாதகமான ஒரு விடயம்தான். தமிழ் மக்களின் கவனத்தை, தமிழ்க்கட்சிகளின் கவனத்தை அவ்வப்போது வெவ்வேறு நிகழ்வுகளின் மீது திசை திருப்புவது. தமிழ் மக்களின் கூட்டுக் கவனத்தைச் சிதறவிடுவது. அண்மை வாரங்களாக தமிழ்ச் சமூகத்துக்குள் காணப்படும் சாதி ஏற்றத்தாழ்வுகளைக் குறித்தும் சாதி ஒடுக்குமுறைகளைக் குறித்தும் விமர்சனங்கள் வெளிவருகின்றன. தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையுந்தான். சமூக விடுதலை இல்லாத தேசியவிடுதலை, விடுதலையே அல்ல. இந்த விளக்கத்தோடு உள்ளூரில் காணப்படும் சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராடவேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் உண்டு. மதமுரண்பாடு, சாதி முரண்பாடு, நாவற்குழி, தையிட்டி வெடுக்குநாறிமலை, குருந்தூர்மலை போன்ற அனைத்து அம்சங்களும் தமிழ் மக்களின் கவனத்தை அவ்வப்போது சிதறடிக்கின்றன. இவற்றிற்கு எதிராக தனித்தனியாக போராடத் தேவையில்லை. இவை அனைத்தும் தேசநிர்மானத்துக்கு ஏற்பட்ட சவால்களே. எனவே தேசத்தை ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுகட்டியெழுப்பும் போது இந்த விடயங்களை எதிர்கொள்வதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டுவிடும்.

இது மே மாதம். 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மத்தியில் இருந்த ஒரு கருநிலை அரசு தோற்கடிக்கப்பட்ட மாதம். "யுத்தத்தை வெற்றி கொண்டவர்கள் நாங்கள்" என்று தையிட்டியில் வைத்து ஒரு போலீஸ் அதிகாரி கூறுகிறார். அதன் பொருள் இதுதான். நீங்கள் தேசமாக இருப்பதை நாங்கள் தோற்கடித்து விட்டோம் என்று பொருள். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் ஒரு தேசமாக மேலெழுவதைத் தோற்கடிப்பதில் அரசாங்கத்தை விடவும் தமிழ்க் கட்சிகளுக்கே பங்கு அதிகம்.

இதை மறுவளமாகச் சொன்னால் தமிழ் மக்களை ஓரளவுக்காவது தேசமாகத் திரட்டியது அரசாங்கந்தான். ஒடுக்குமுறைதான் தமிழ்க்கட்சிகளை ஓர் உணர்ச்சிப்புள்ளியில் சந்திக்க வைக்கின்றது. தையிட்டியில் அது நடந்தது. மு.திருநாவுக்கரசு, அ.சிவத்தம்பி போன்றவர்கள் கூறுவது போல எதிரிதான் தமிழ்த்தேசியத்தின் பிரதான பலமா?

தியாகியாய், துரோகியாய், கைக்கூலியாய், ஒட்டுக்குழுவாய், வடக்காய், கிழக்காய், வன்னியாய், யாழ்ப்பாணமாய், கட்சியாய், சாதியாய், சமயமாய், இன்னபிறவாய், சிதறிப்போகும் சிறிய தமிழ் மக்களால், அரசாங்கம் கட்டிக்கொண்டிருக்கும் விகாரைகளிலிருந்து ஒரு செங்கல்லைத்தானும் அசைக்க முடியுமா?

# சமகால ஊடகவியலும் சிறுபான்மை தரப்பும்




மனிதர்கள் தங்களுடைய கருத்துக்களைப் 'பேசுவதற்கு' சட்டரீதியாகவும், அரசியலமைப்பு ரீதியாகவும் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தாலும், அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தக்கூடிய இடம் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு, அதிக விலைக்கு ஏலம் விடப்பட்டிருக்கிறது என்று ஒருமுறை எழுத்தாளர் / சமூக செயற்பாட்டாளர் அருந்ததிராய் குறிப்பிட்டிருந்தார். இலங்கையைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கின்றது. அதன் பின்னணியில் சிறுபான்மை - பெரும்பான்மை என்ற ஏற்றத்தாழ்வு அரசியல், பொருளாதாரம், பண்பாடு என்று எல்லாத்திசைகளிலும் விரிந்துள்ளது. ஊடகவியலைப் பொறுத்தவரையிலும் பெரும்பான்மை - சிறுபான்மை என்ற தரப்புக்கள் இருக்கவே செய்கின்றன. தேசிய ஊடகங்கள் நாடு முழுவதும் இயங்கினாலும் அவை ஒரே நாளில் வெவ்வேறு செய்திகளுக்கே முக்கியம் கொடுத்து செய்திகளை அறிக்கையிடுவது மொத்த நாட்டின் முரண்களையும் தெளிவுபடுத்துகின்றது. உதாரணமாக, போர் முடிவடைந்த நாளில் பெரும்பான்மை தரப்பு சார் ஊடகங்கள் போர் வெற்றிக் கொண்டாட்டங்களை அறிக்கையிடுகின்றன. சிறுபான்மை தரப்பு சார் ஊடகங்களோ போரில் கொல்லப்பட்ட மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளை அறிக்கையிடுகின்றன. இந்த முரண் தொடர்ந்தும் இருந்துகொண்டே இருக்கின்றது. இப்பின்னணியில் இலங்கையில் நவீன ஊடகவியல் என்பது எவ்வாறு இயங்கின்றது. அதன் பின்னணிகள் பிரச்சினைகளைப் பற்றி மூன்று தமிழ் ஊடகவியலாளர்களுடன் நிகழ்த்தப்பட்ட உரையாடல்களின் பின்னர் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

நவீன தொழில்நுட்ப பேச்சு சுதந்திரத்திற்கானபெரியஇலத்திரனியல் வெளி ஒன்றை இணையம் ஊடாக ஏற்படுத்தி தந்திருக்கிறது என்ற மாயை உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்று சமூக வலைத்தளங்களில், இணையப்பக்கங்களில் கோடிக் கணக்கான மக்கள் தங்களின் கருத்துக்களைப் பகிர்கிறார்கள். 'ஊடகத்துறை' இன்று அனைவரும் செய்தி ஒன்றை அறிக்கையிட முடியும் என்று குறிப்பிடுகிறது. நம்முடைய கருத்து சுதந்திரத்தினுடைய வெளி விரிந்துள்ளது என்று நாம் நினைக்கிறோம். ஆனால், இணையமே நம்மை அதிகமாக கண்காணிக்கவும், நமது அந்தரங்கமான விடயங்களில் இருந்து நாம் பகிரும் கருத்துவரை நம்மை கண்காணிக்கிறது என்றும் நம்மைத் திருடுகின்றது என்று ஒருபக்கத்தில் அதிர்ச்சியடைய வைக்கிறார்கள். அதேவேளை, மெய்யான நபர்களைக்காட்டிலும் போலியான கணக்குகளும், பக்கங்களும், அடிப்படை அறமோ உண்மையோ அற்றதகவல்களுமே இந்த இணையவெளி எங்கும் அதிகமாகக் கிடக்கின்றது என்றும் புள்ளி விபரங்கள் எச்சரிக்கின்றன. "அனைவரும் செய்திகளை அறிக்கையிட முடியும்" என்பது ஒரு வகையில் போலியான அல்லது அர்த்தமற்ற ஒன்றாகவே பெரும்பான்மையாக இருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இப்பின்னணியில் இன்று இணைய வெளியைத்தாண்டி அல்லது இணைய வெளி உள்ளடங்கலாக உண்மையான செய்திகள், ஆதாரங்கள், உறுதிப்படுத்தப்பட்ட மூலங்கள், ஊடக அடிப்படையான அறம் மற்றும் உழைப்பு என்பவற்றோடு இயங்கக்கூடிய 'தொழில்சார் ஊடகவியலாளர்களின்' வகிபங்கும் அவர்களுடைய கருத்து சுதந்திர வெளியும் சமகாலத்தில் எப்படிப்பட்டது என்பதையே இலங்கையில் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யத்தக்க தமிழ் ஊடகவியலாளர்கள் மூவருடன் நாடத்திய உரையாடலின் பின்னரான கட்டுரை இது.

குமணன், கிரிசாந், தமிழ்மதி இவர்கள் மூவரும்வடபகுதியைச்சேர்ந்த ஊடகவியலாளர்கள். அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் தொழில்சார் இணைய ஊடகங்களில் பணியாற்றி வருபவர்கள். சமகாலத்தில் இலங்கைச் சிறுபான்மைச் சூழலில் நிகழக்கூடிய எரிகின்ற பிரச்சினைகளை அறிக்கையிடுபவர்கள். அதன் பின்னணியில் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளக் கூடிய சமகால நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும்பலவகைகளிலும் எதிர்கொள்பவர்கள். அவர்களிடம் சமகால ஊடகவியலை ஒட்டி மூன்று கேள்விகள் கேட்கப்பட்டன.

**சமகாலத்தில் இணைய வெளி வியாபித்துள்ள சூழலில் தொழில் முறையான ஊடகவியலில் உள்ள பிரச்சினைகள்?**

**தாங்கள் அறிக்கையிடும் முக்கியமான பிரச்சினைகள் எவை, அவற்றை அறிக்கையிடுவதில் உள்ள சிக்கல்கள்?**

**சமகாலப் பிரச்சினைகளை அறிக்கையிடும் போது ஏற்படக்கூடிய அதிகாரத் தரப்பு சார்ந்த நெருக்கடிகள்?**

இணைய ஊடகங்களின் வருகை என்பது ஊடகவியலில் 'பிரஜைகள் ஊடகவியல்' என்ற புதிய வெளியைத் திறந்துள்ளது. செய்தி ஒன்றை சமூகத்தின் மூலை முடுக்குகளில் இருந்து கொண்டு வந்து சேர்க்கத்தக்கவாறு அனைவருமே 'கைத்தொலைபேசிகள்' மூலம் புகைப்படங்களை எடுக்கவும் செய்திகளை அறிக்கையிடவும் முடியும். இன்று பெரும்பாலான இணைய ஊடகங்கள் அவ்வாறே தங்களுடைய 'பிரஜை ஊடகவியலாளர்கள்' மூலம் செய்திகளைப் பெறுகின்றனர். ஆனால், இங்கே தொழில்சார் ஊடகவியலாளர்கள், அச்செய்திகள் பற்றிய உண்மைத்தன்மை, அறம் மற்றும் செய்திகளை அறிக்கையிடும் முறைமை தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர். இன்று ஆயிரக்கணக்கான இணையத்தளங்கள் பதிவு செய்யப்படாமல் இயங்குகின்றன, சமூக அறவியல் சார்ந்தோ, சட்டம் சார்ந்த அறவியல் சார்ந்தோ அவை கதைப்பதில்லை. அவை வெறுமனே மக்களை குறித்த தளங்களுக்குள் நுழையச்செய்து அதன் மூலம் வருவாய் ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்டவை. அதனால் அவற்றின் நோக்கம் செய்தியாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய அடிப்படையான சமூக அக்கறையில் இருந்து வருவதில்லை. சட்ட நடைமுறைகளை மதிப்பதில்லை. சைபர் வெளிக்குரிய கட்டற்ற தன்மை இணைய ஊடகவெளி என்பது நம்பகத்தன்மை அற்றதாகவும் கலாசார பிறழ்வுகள் கொண்டதாகவுமே பெரும்பாலும் இருக்கின்றன.

**ஊடகவியலாளர் கிரிசாந் பிரஜைகள் ஊடகவியலில் சில காத்திரமான விடயங்கள் நடைபெறுவதையும் சொல்லியிருந்தார்**

"பிரஜைகள் ஊடகவியல் என்பது வந்த பிறகு செய்தி சேகரிப்பின் எல்லைகள் விரிவடைந்தன. பத்திரிக்கை ஒன்று செய்தியை அறிக்கையிடும் போது அதன் வணிகப் பின்புலத்தினால் தீர்மானிக்கப்படும் பக்க அளவுகளும், செய்தி முக்கியத்துவங்களுக்கு ஏற்றவாறு தரப்படுத்தப்படும் போதும் விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய மக்களை அறிக்கையிடக்கூடிய செய்திகளைச் சேகரிக்க கூடிய ஊடகவியலாளர்களின் எல்லாச் செய்திகளும் பிரசுரமாகும் என்பதில்லை. ஆனால், பிரஜைகள் ஊடகவியல் பத்திரிக்கைகள் கொண்டிருக்கக்கூடிய எல்லைகளை இணையம் மூலம் தாண்டுகின்றன. மக்களின் விளிம்பு நிலையில் உள்ள கதைகள் செய்திகளாக மாறுகின்றன. தொழில்சார் ஊடகவியலாளர்களின் கண்காணிப்பு வழிகாட்டுதல் அல்லது ஊடகவியல் நிறுவனங்களின் வழிகாட்டுதல் மூலம் பிரஜைகள் ஊடகவியல் அறிவூட்டப்படவும் கண்காணிக்கப்படவும் இயலுமாக விருந்தால், மக்களின் சகல பிரச்சினைகளும் கருத்துச்சுதந்திரமும் இன்னும் விரிவடையும்" என்றார்.

பிரஜைகள் ஊடகவியலோடு சார்ந்து இயங்கக்கூடிய நபர்களை, பத்திரிகையாளர்களை அரசாங்கம் கண்காணிக்கவே செய்கிறது. தேசிய பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, கலாசார பாதுகாப்பு முதலானவற்றிற்காக இணைய வெளி அரசினால் கண்காணிக்கப்பட வேண்டும் என்பது சரிதான், ஆனால், அது மக்களில் கருத்துச் சுதந்திரத்தையும் சேர்த்துக் கண்காணிக்கப்படவோ அச்சுறுத்தப்படவோ செய்யும் போது அது பெரிய பிரச்சினையாக மாறுகின்றது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஏற்பட்ட 'அரகலய' போராட்டங்களின் பின்னர் மிலேச்சத்தனமாக மக்கள் ஊடகவியல் சார்ந்து செய்திகளைப் பகிர்ந்தவர்கள், போராட்டங்களுக்கு ஆதரவளித்தவர்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் கண்காணிக்கப்பட்டனர், அச்சுறுத்தப்பட்டனர், பின்னர் பலரும் அதன் அடிப்படையில் கைது செய்யவும் பட்டனர். சிங்கள மக்களுக்கே இதே நிலை இருக்கும் போது ஏற்கனவே அச்சத்துடனும் அச்சுறுத்தலுடனும் இனவாத ஒடுக்குமுறைகளின் பல்வேறு பின்னணிகளில் இருக்கக்கூடிய சிறுபான்மை மக்கள் பெரும்பாலும் போராட்டத்தை 'வேடிக்கை பார்க்கும்' திராணியுடனேயே இருக்க முடிந்தது.

மேலும் சிறுபான்மை மக்கள் சார்ந்து இருக்கக்கூடிய எரிகின்ற பிரச்சினைகளை அறிக்கையிடுவதில் பிரஜைகள் ஊடகவியலுக்கு பயமும் தயக்கமும் இருக்கின்றது. சொல்லப்போனால் தொழில்சார் ஊடகவியலாளர்களில் கூட ஒரு சிலரே அவற்றை நேரடியாக களத்தில் நின்று அறிக்கையிடுகின்றனர். அவர்களும் அதிகாரத்தரப்பினால் மிகவும் அச்சுறுத்தலுக்கும் கண்காணிப்புக்கும் உள்ளாகின்றனர்.

இலங்கையைப் பொறுத்த வரையில் நீண்டகாலமாக ஊடகவியல் சார்ந்து நெருக்கடிகளைக் கொடுக்கக்கூடிய 'எரிகின்ற' பிரச்சினைகளின் மூலமாக இலங்கையின் 'இனப்பிரச்சினையே' இருந்து வருகின்றது. பொருளாதார நெருக்கடி, உயிர்த்த ஞாயிறு தாக்குல் போன்ற பிரச்சினைகள் கூட குறிப்பிட்ட காலத்தில் அணைந்துவிடுகின்றன. இறுதி உள்நாட்டுப் போருக்குப் பிறகு இனப்பிரச்சினையும் போர்காலமும் உருவாக்கிய பல்வேறு எரிகின்ற பிரச்சினைகள் இருந்தன. குறிப்பாக போர்காலத்தில் 'வலிந்து காணாமலாக்கப்பட்ட' மக்களின் நிலை பற்றிய போராட்டங்கள் இலங்கையின் வடக்கு கிழக்கில் மட்டுமன்றி சிங்கள மக்களிடையே காணாமலாக்கப்பட்டவர்களை முன்னிட்டும் எழுந்தன. குறிப்பாக முன்னாள் போராளிகள், சரணடைந்த மக்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் என்று பலரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். வடக்கு கிழக்கில் அது போருக்குப் பின்னர் பெரியளவான போராட்டமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சர்வதேச அளவில் இலங்கைக்கு அழுத்தங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இப்போராட்டங்கள் முக்கியமாக "தாய்மார்களின்" போராட்டம் என்று அறியப்படுகிறது. வடக்கு கிழக்கில் உள்ளதொழில்சார் ஊடகவியலாளர்கள் இதனை திறம்பட அறிக்கையிட்டு வருகின்றனர். முக்கியமாக இப்போராட்டங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், காணொளிகள் உலகெங்கும் குறித்த பிரச்சினையைக் கொண்டு சேர்த்தன.

ஊடகவியலாளர் குமணன், கடந்த சில ஆண்டுகளாக இப்போராட்டத்தை விரிவாக அறிக்கையிடுகிறார். முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்று அனைத்து இடங்களிலும் நடைபெறும் போராட்டங்களை புகைப்படம் மூலமும் செய்திக்கதைகள் மூலமும் பதிவு செய்கிறார். இத்தாய்மார்களின் போராட்டங்களில் பதிவுசெய்த புகைப்படங்களை 'உத்தரிப்புக்களின் அல்பம்' என்ற புகைப்படக் கண்காட்சியின் மூலம் மக்களுக்கு கொண்டு சேர்த்தார். இவ் அறிக்கையிடலின் போது புலனாய்வாளர்கள், பொலிஸாரின் அச்சுறுத்தல்களையும் கண்காணிப்பையும் குமணன் ஏராளம் எதிர்கொண்டிருக்கிறார். வெளிப்படையாகவே 'நீங்கள் கண்காணிக்கப்படுகிறீர்கள்' என்பதை அத்தரப்பு உணரவைத்துக்கொண்டே இருக்கிறது. விசாரணைகள், கண்காணிப்புக்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

"மக்கள் போராட்டங்களை அறிக்கையிடச்செல்லும் போது, இராணுவத்தினரோ பொலிஸாரோ 'ஐசியைக் காட்டுங்கள்' என்று தொடங்கும் தோரணையில் இருந்து அந்த அச்சுறுத்தல் ஆரம்பிக்கின்றது, முக்கியமாக ஊடகவியலில் 'எரிகின்ற பிரச்சினைகளுக்குள்' வராமல் பல ஊடகவியலாளர்கள் விலகிக்கொள்வது இவ்வகையான அச்சுறுத்தல்களால்தான்.

12ஆம் பக்கம் பார்க்க...

**யதார்த்தன்**

# புலனாய்வாளர்களின் கையில் எந்த நாடு தங்கியிருக்கிறதோ அந்த நாட்டை அசைக்க முடியாது



உலக வல்லரசு நாடுகள் தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக அந்நாட்டு புலனாய்வுக்கட்டமைப்பை பலப்படுத்தி வைத்திருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் இஸ்ரேல், அமெரிக்கா, ரஷ்யா, ஸ்கொட்லாந்து இப்படி பலம்மிக்க புலனாய்வுநாடுகள்அதில்இடம்பெறுகின்றன. வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளும் அந்நாட்டின் புலனாய்வுக்கட்டமைப்பிலேயே தங்கியுள்ளது. அதேபோன்று இலங்கை நாட்டையும் கூட அவ்வாறான ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவருவதன் ஊடாக உலகளாவிய ரீதியில் தலைசிறந்த ஒரு தீவாக மாற்ற முடியும். உலக நாட்டில் இன்டர்போல், ஸ்கொட்லாந்து பொலிஸ் போன்ற உளவுப்பிரிவுகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. அதிலும் குறிப்பாக அமெரிக்காவைப் பொறுத்தவரையில் 52 மாநிலங்களில் 52 உளவுப்பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இப்படைப்பிரிவுகளின் கோட்வேட் அல்பா - பீட்டா என்கின்ற அடிப்படையில் அமைகின்றது. 200 நாடுகளிலும் முதல்தரத்தில் அமெரிக்காவின் CIA இருப்பதுடன் ஸ்கொட்லாந்து பொலிஸ் 24 மணிநேர உளவுநடவடிக்கையில் ஒரு விடயத்தை கண்டுபிடித்துக்கொடுக்கிறது. உலக நாடுகளில் ஆசியப்பிராந்தியத்தில் மாத்திரமே புலனாய்வுக்கட்டமைப்பை மீறி ஜனாதிபதி அதிகாரத்தினை பயன்படுத்துகிறார். இதனால் அந்நாட்டு புலனாய்வாளர்களினால் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. அந்நிய நாட்டவர்கள் நாட்டிற்குள் நுழைவதற்கும் வசதியாக அமைகிறது.

இந்தியாவில் தலைசிறந்த புலனாய்வுப்பிரிவாக ரோ செயற்படுகிறது. ரோவினுடையபுலனாய்வுக்கட்டமைப்பையே முறியடித்தவர்கள்தான் விடுதலைப் புலிகள். அல்பா - பீட்டா கோட்வரிசையில் விடுதலைப்புலிகளினுடைய புலனாய்வுப் பிரிவினரின் பெயர் டெசி ஆகும். ராஜீவ்காந்தியை கொலை செய்வதற்காக பயன்படுத்திய குறியீடு கஞ்சிகுடிச்சாறு ஆகும். கஞ்சிகுடிச்சாறு ஓவர் என்பது அவர் படுகொலை செய்யப்பட்டுவிட்டார் என்று அர்த்தமாகும்.

அவ்வாறிருக்கின்றபொழுது இலங்கையில் முப்படை அதிகாரங்களையும் தன்னகத்தே வைத்திருக்கும் ஜனாதிபதி ஒருவர் அதிகாரத்தினை பயன்படுத்தி வெற்றி காண முடியும் என்பது பகற்கனவாகும். நாட்டின் புலனாய்வின் கட்டமைப்பை பலப்படுத்த வேண்டியதன் அவசியம் ஜனாதிபதியின் கையில் தங்கியிருக்கின்றது. அதேநேரம் புலனாய்வுக் கட்டமைப்பின் ஆலோசனையின் படியே ஜனாதிபதியவர்கள் தனது நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். ஜனநாயக நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக புலனாய்வு நடவடிக்கைகளை புலனாய்வுத்துறையினரிடமே கையளிப்பது சிறந்ததொன்றாகும்.

இன்றைய காலகட்டத்தில் புலனாய்வாளர்கள் சுயாதீனமாக செயற்பட முடியாத நிலை இலங்கையில் உள்ளது. புலனாய்வாளர்கள் என்பது மக்களோடு ஒன்றிப்போகின்றவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் வேறு, மக்கள் வேறு என பிரிப்பதன் ஊடாக வேவு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது மிகக்கடினமானதொன்றாகும். ஒசாமா பின்லேடனைப்பிடிப்பதற்கு10வருடங்களுக்கு முன்பதாகவே அமெரிக்க அரசினால் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. அதனூடாக பாகிஸ்தானுக்கு சென்று வெற்றிகரமாக தாக்குதலை நடாத்தி திரும்பினர் அமெரிக்க புலனாய்வுப்படையினர்.

உதாரணமாக கடந்த காலங்களில் சனல் 4 தொலைக்காட்சியினர் இலங்கைக்கு வந்தபொழுது இலங்கையரசு கையாண்ட விதம் தவறானதொன்றாகும். இலங்கை தொடர்பில் தான் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படவில்லையென சனல் 4 தொலைக்காட்சியின் சுயாதீன ஊடகவியலாளரும், போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்தின் இயக்குனருமான கெலும் மக்ரே தெரிவித்தார். ஒரு ஊடகவியலாளன் தனது கடமையை செய்யவேண்டும். இலங்கை பிரச்சினையில் நான் செய்து வருவது சரியானதே என்றார். இலங்கையின் இறுதிக்கட்ட போரில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் அவர் இயக்கிய போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படம் இலங்கை உட்பட உலகம் முழுவதும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியது. பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பான செய்தி சேகரிப்புக்காக இலங்கை வந்த மக்ரே, விமான நிலையத்தில் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை எதிர்கொண்டதுடன் வடபகுதிக்கு செல்ல அவர் மேற்கொண்ட முயற்சியின் போதும் இவ்வாறான எதிர்ப்பை எதிர்கொண்டார். கெலும் மக்ரே விடுதலைப்புலிகளிடம் சம்பளத்தை பெற்று வருவதாக சில ஆர்ப்பாட்டக்காரர்கள் அப்போது குற்றம் சுமத்தினர்.

இதற்கு பதிலளித்த மக்ரே, இது ஆதாரமற்றதும் அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டு எனக் குறிப்பிட்டார். நான் முதலாவது காணொளி ஆவணப்படத்தை இலங்கையில் தயாரித்தேன். அதன் பின்னர் சில தகவல்களையும் காணொளி காட்சிகளையும் பெற்றேன் என்றார். இந்த காணொளிகள் உண்மையானது என்பதற்கு என்ன உத்தரவாதம் என எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மக்ரே, அது ஒளிபரப்பப்படும் முன்னர் அதன் நம்பகத்தன்மை சரிபார்க்கப்பட்ட பின்னரே ஒளிபரப்பப்பட்டது எனக் கூறினார்.

எனது இறுதி காணொளி ஆவணப்படம் பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னர் தயாராகியது. எனினும், சோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் இது வெளியிடப்படவில்லை. ஒரு ஊடகவியலாளன் என்ற முறையில் எனது கடமைகளை முன்னெடுக்க இலங்கை வருவதற்கான வீசா வழங்கப்பட்டது. எனினும் வருகை தந்த நாள் முதல் புலனாய்வுத்துறை மூலம் எனது நடவடிக்கைகள் கன்காணிக்கப்படுகின்றன. இது ஏமாற்றத்தை அளிக்கின்றது எனவும் கெலும் மக்ரே குறிப்பிட்டார். சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்துடன் இணைந்து இலங்கைக்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவோரைக் குறிவைக்கும் செயற் பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்தது. இவ்வாறானகருத்துக்களையோஇவ்வாறான செயற்பாடுகளையோ கூறுவதற்கு கெலம் மக்ரேவிற்கு வாய்ப்பளித்ததும் அரசாங்கமே.

ஒரு நாட்டின் புலனாய்வு என்பது தமது செயற்பாடுகளை இரகசிய மான முறையில் செயற்படுத்தியிருக்க வேண்டுமாயின் அவர்களோடு பல ஊடகவியலாளர்களையும் இணைத்தி ருக்கலாம். அதைவிடுத்து ஆர்ப்பாட்டங்கள் செய்வது எந்தவித பயனும் அற்றது. இன்று சர்வதேச அளவில் இலங்கை தொடர்பாக பேசுவதும் இன்னும் பல சர்ச்சைகள் இருக்கின்றன. புலனாய்வினரின் செயற்பாடுகளை புலனாய்வினரிடமே விட்டுவிடுவதன் மூலம் அவர்களுடைய நடவடிக்கைகளை அவர்கள் திறம்படச் செய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் போராட்டத்தை தோற்கடித்ததற்கு உலக நாடுகளின் பங்களிப்பு இருந்தாலும் கூட புலனாய்வுகளின் ஊடுருவலுக்கு அமெரிக்காவே மிகவும் உந்துசக்தியாக இருந்தது. இன்று இலங்கையரசாங்கம் புலனாய்வு கட்டமைப்பினரை வளர்த்தெடுக்கும் ஒரு கட்டாய நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. அவ்வாறு புலனாய்வுப்பிரிவினரை கட்டியெழுப்பாத பட்சத்தில் இந்த நாடு அமெரிக்காவின் காலனித்துவ நாடாகவோ அல்லது இந்தியா, சீனா போன்ற நாடுகளின் காலனித்துவ நாடாகவோ மாற்றம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

உலக வல்லரசுகள் எல்லாம் தமது புலனாய்வு நடவடிக்கைகளை கட்டியெழுப்புவதில் குறிக்கோளாக இருக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் பதவி ஆசையில் நாட்டை விற்கும் அளவிற்கு செயற்பட்டு வருகின்றனர் என்பது மனவேதனைக்குரியதாகும். தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற அனைத்து இடங்களிலும் இலங்கை புலனாய்வாளர்களை அமர்த்தினாலும் கூட அவர்களினுடைய செயற்பாடுகள் வெற்றியளிக்காத நிலையே காணப்படுகின்றது. காரணம் சுயாதீனமாக புலனாய்வாளர்கள் செயற்பட முடிவதில்லை.

இலங்கை புலனாய்வுப் பிரிவினர் எதிர்காலத்தில் தீவிரவாதச் செயற்பாடுகளோ அல்லது புரட்சி ஒன்று எழுவதற்கோ இடமளிக்கப்போவதில்லை என திடகாத்திரமாக தெரிவித்துள்ளனர். இதேநேரம் புலம்பெயர் நாடுகளில் புலிகளின் செயற்பாடுகள் இலங்கையின் இறைமைக்கு குந்தகமாகவே அமைகின்றது என்றும் அச்செயற்பாடுகள் இலங்கையின் நற்பெயருக்கு ஊறு விளைவிக்கின்றது எனவும் அரசு வெளிப்படையாகவே குற்றஞ்சுமத்தி வருகின்றது.

இந்நிலையில் ஜெனிவாவில் இலங்கைப் புலனாய்வுத் துறையினர், கன்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்கிற ஒரு தகவலும் உண்டு. இலங்கையிலிருந்து சென்றுள்ள அணியுடன் ஐரோப்பிய நாடுகளில் நிலைகொண்டுள்ள புலனாய்வு முகவர்களும் இணைந்து செயற்படுவதாக கூறப்படுகின்றது. புலம்பெயர் நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து சென்றனர். இவர்களில் பலர் புலிகளுக்கு நிதி வழங்கியவர்கள் என்பதும் புலிகளின் ஊர்வலங்கள் மற்றும் செயற்பாடுகளில் பங்கெடுத்தவர்கள் என்பதும் தெட்டத்தெளிவாக தெரிந்திருந்தும் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேநேரம் 2009 மே இற்கு பின்னர் புலம்பெயர் தேசத்தில் செயற்படுகின்றவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் நாட்டுக்குள் நுழைய முடியாத வகையில் அவர்களது விபரங்கள் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறானவர்கள் சிலர் விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்ட சம்பவங்கள் குறிப்பிடத்தக்களவில் பதிவாகி யுள்ளது. இந்நிலையில் ஜெனிவாவில் களமிறங்கியுள்ள புலனாய்வாளர்கள் நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றவர்களை துல்லியமாக இனங்கண்டு அவர்கள் மீதான அதி உச்ச நடவடிக்கைக்கு தயாராகிக் கொண்டிருப்பதாகவும் நம்பப்படுகின்றது. புலம்பெயர் புலிகள் பல பிரிவுகளாக பிளவுபட்டுள்ளனர். இவ்வாறு பிளவுபட்டுள்ள அநேகர் இலங்கை அரசுடன் ஏதோ ஒரு வழியில் தொடர்புகளை பேணி வருகின்றனர். இவர்கள் தமது இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக மறு தரப்பை காட்டிக்கொடுத்தும் வருகின்றனர்.

இவ்வாறு இலங்கைப் புலனாய்வினரின் செயற்பாடுகள் இருந்தாலும் பெரியளவில் மாற்றம் ஒன்றை கொண்டுவருவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. எமது நாடு தொடர்பாகவும், பாதுகாப்பு சார்பாகவும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமாயின் புலனாய்வுக் கட்டமைப்பினரை தொழில்நுட்ப ரீதியாக வளர்த்தெடுக்கவேண்டிய நிலைப்பாட்டிற்குள் இன்றைய அரசாங்கம் இருக்கின்றது.

பல்வேறு புலனாய்வு அமைப்புக்கள் இலங்கையில் செயற்பட்டு வருகின்றன. இவர்களது தற்போதைய செயற்பாடுகள் நூற்றுக்கு 35 வீதமாகவே காணப்படுகின்றது. விடுதலைப்புலிகளின் கட்டமைப்பு வெளிநாடுகளின் யுத்தத்தின் பின்னர் இயங்குவதற்கு காரணமாக அமைந்தவர்களும் இலங்கையரசே எனலாம். இனிவரும் காலங்களிலாவது புலனாய்வுக்கட்டமைப்பை கட்டி யெழுப்புவதன் ஊடாகவும், அவர்களின் கையில் அதிகாரங்களை வழங்குவதன் ஊடாகவும், சிறந்ததொரு புலனாய்வுக்கட்டமைப்பை இலங்கையில் உருவாக்கலாம். பல நாடுகளின் ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டுள்ள இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு இதுவே சிறந்த நடவடிக்கையாக அமையும். இதைவிடுத்து நாட்டுக்குத் தேவையற்ற பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டு நாட்டை சீர்செய்ய முடியாது என்பதே உண்மை.

**நெற்றிப்பொறியன்**

# சரத் வீரசேகரவிற்கு வடகிழக்கு மக்கள் வாய்க்கரிசி போடுவார்கள்



முன்னாள் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர், அட்மிரல் சரத் வீரசேகர அவர்கள் ஒரு இனவாதியாக தமிழ் மக்கள் மத்தியில் தன்னை நிலைநிறுத்தியிருக்கிறார். இவர் இனவாத - மதவாதக் கருத்துக்களை இந்தநாட்டில்திணித்துமற்றொருயுத்தம் இந்த நாட்டில் உருவாகுவதற்கான அடித்தளத்தையே மீண்டும் உருவாக்கி வருகிறார். யுத்தம் நிறைவடைந்து ஒரு தசாப்த காலத்தைக் கடந்துள்ள இந்த நிலையில் இவ்வாறான கருத்துக்களை தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. சரத் வீரசேகர அவர்கள் ஒன்றைச் சிந்திக்கவேண்டும். இன்று வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் ஓரளவாவது நிம்மதியாக வாழ்கின்றார்கள். இனவாத - மதவாத சகதிக்குள் இருந்து ஓரளவேனும் வெளியில் வந்துகொண்டிருக்க, வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகளை அமைப்போம் என்கிற ரீதியில் தொடரும் இவரது கருத்துக்கள் வெளிப்படையாக இனவாதத்தை கக்குகின்றன.

ஞானசார தேரருக்குப் பின்னர் சரத் வீரசேகர போன்ற ஒருவரே இவ்வாறு இனவாதப் பேச்சுக்களைப் பேசுகின்றார். தமிழ் அரசியல்வாதிகள் தான் இனவாதம் பேசுகின்றனர் என்கிறார் பாராளுமன்றில். இந்து ஆலயங்களை இல்லாமல் அழித்தொழித்துவிட்டு பௌத்த விகாரைகளை அமைக்கவேண்டும் என்பதில் இவரும் விடாப்பிடியாக இருக்கும் ஒருவராக இன்று இருக்கிறார். இனத்துவேசங்கள் மூலமாக சரத் வீரசேகர மீது யாராவது தாக்குதல் நடவடிக்கையொன்றினை மேற்கொண்டால், அதை அப்படியே தமிழ்த் தரப்பின் மீது பழியைப் போடுவதற்கு இவர் தயாராக இருக்கின்றார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் பாராளுமன்றத்திற்கு அழைத்துவரப்பட்ட இவர், இன்று நாட்டில் வாழும் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தும் விதமாக இனவாதக் கருத்துக்களைப் பேசி வருகின்றார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட தையிட்டி பௌத்த விகாரை, மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாகவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க அவர்களும் ஆட்சி அதிகாரத்திலே இருந்த காலப்பகுதியாகும். இன்று அவ் விகாரை பாரிய விகாரையாக கட்டியெழுப்பப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது. அதுவும் குறித்த விகாரைப் பகுதியை உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தி, மறைமுகமாகவே குறித்த விகாரையானது இன்று கோபுரம் வரை கட்டப்பட்டுள்ளது.

வேலைகள் பூர்த்தியாகமட்டும் யாருக்கும் வெளியில் தெரிந்து விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்துள்ளனர். குறித்த விகாரை அமைக்கப்பட்டுள்ள காணியை அண்டிய பகுதிகளில் மக்களது நடமாட்டங்கள் இருந்திருக்குமாயின், தமிழ் மக்கள் அதனைத் தட்டிக்கேட்டிருப்பார்கள். மௌனமாக இருப்பவர்கள் அல்ல. இந்த விடயங்களை இன்றைய பாராளுமன்ற உறுப்பினரும் அன்றைய அமைச்சருமாகவிருந்த சரத் வீரசேகர அறியாமல் விட்டது ஏன்?. இன்று தமிழ் மக்களை இழிவுபடுத்தும் நோக்கிலும், தமிழ் அரசியல்வாதிகளை இனவாதிகள் என்று பாராளுமன்றில் கூறும் இவர், தமிழர் பகுதிகளில் நடக்கும் சிங்கள பௌத்த அத்துமீறல்களை அறியாமல் இருப்பாரா?. யாரோ ஒருவருக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் என்பதற்காக, இன்று இனவாதம் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதாகவே நாம் சரத் வீரசேகரவைப் பார்க்கிறோம். ஏனெனில் சுயமாகச் சிந்திக்கத் தெரிந்த எந்த மனிதனாலும் இவ்வாறான கருத்துக்களைப் பேச முடியாது. உலகமெங்கும் இலங்கையில் நடக்கும் சிங்கள பௌத்த அத்துமீறல்கள் தெரிந்திருக்க, சரத் வீரசேகரவிற்கு மாத்திரம் தெரியாமல் போனது ஏன்?.

குருந்தூர் மலையில் சுமார் இரு வருடங்களுக்கு முன்னதாக ஒரு பௌத்த விகாரையும் இருக்கவில்லை. இன்று பொலிசார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் உதவியுடன், நீதிமன்றக் கட்டளைகளையும் மீறி, தெற்கின் சரத் வீரசேகர போன்ற இனவாத அரசியல்வாதிகளின் அனுசரனையில் குருந்தூர் மலையில் இன்று விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. அந்த மலையில் இருந்த தமிழ் மக்களது வழிபாட்டுக்குரிய விக்கிரகங்கள், பூஜைப் பொருட்கள் தூக்கிவீசப்பட்டது. நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் பூஜைப் பொருட்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. வெடுக்குநாறி மலையில் விக்கிரகங்கள், பூஜைப் பொருட்கள் உடைக்கப்பட்டு தூக்கிவீசப்பட்டது.

தமிழர் வாழ் பகுதிகளில் இராணுவ முகாம்கள் இருப்பின், இராணுவம் வழிபடுவதற்கென குறிப்பிட்ட முகாம்களுக்குள் இராணுவம் இருக்கும் வரை ஒரு சிறிய வழிபாட்டிடத்தினை அமைக்கலாம். விடுதலைப்புலிகள் இருந்த காலத்திலும் விகாரைகள் இருந்தது. மக்கள் வந்து வழிபட்டுச் சென்றார்கள். தர்மத்தைப் போதிக்கின்ற புத்த பகவானையே வெறுப்படையச் செய்யும் செயலை இன்று தெற்கின் சரத் வீரசேகர போன்ற சில அரசியல்வாதிகள் செய்கின்றனர். பௌத்த மதம் கூறும் அறம் இன்று செயற்பாட்டில் தலைகீழாக மாறியுள்ளது.

இந்த பௌத்தமயமாக்கலும் மதவாகக் கருத்துக்களும் நிச்சயமாக வடகிழக்கில் இருக்கக்கூடிய மக்களை தூண்டும் ஒரு நடவடிக்கையாகும். மக்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்துகின்ற நடவடிக்கையாகும். ஆயுதக்கட்சிகளை மீண்டும் சீண்டிப் பார்க்கின்ற ஒரு நடவடிக்கையாகவுமே அமைந்துள்ளது எனலாம். அடக்குமுறைகளைப் பிரயோகிக்கின்றபோது பிரச்சினைகள் தான் உருவாகும். இன மத ஜாதியை வைத்து பிரச்சினைகளை ஏற்படுத்தினால் நிச்சயமாக அழிவு ஏற்படும் என்பதுதான் வரலாறு.

சரத் வீரசேகர ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். நீங்கள் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையினை மேற்கொண்டுள்ளீர்கள். எத்தனையோ தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கி தமிழ் மக்களை கொத்துக்கொத்தாக கொன்றொழித்துள்ளீர்கள். அதை எல்லாம் மறந்துவிட்டு, மீண்டும் பாராளுமன்றிலும் வெடுக்குநாறி மலையிலும் என உங்களது சண்டித்தனங்களைக் காட்டிவிட்டுப் போகின்றீர்கள். உங்களது இவ்வாறான செயற்பாடுகளால் தான் இந்த நாடு இன்று வங்குரோத்தடைந்து காணப்படுகின்றது. இப்போதைக்கு மீளவே முடியாத பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது என்பதை நினைவுபடுத்துங்கள்.

சர்வதேச மட்டத்தில் கூட நன்மதிப்பை இழந்துள்ள சரத் வீரசேகர போன்றோர், உள்நாட்டில் இனவாதம் பேசிக்கொண்டு, இன்று அரசியல் பயணத்தில் தம்மை ஈடுபடுத்தி அடைக்கலம் பெற்று, பாதுகாப்பாக சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து வாழ்க்கை நடத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளீர்கள். இதன் மூலமாக மீண்டும் தமிழ் மக்களோடு போராட்டங்களைச் செய்யலாம், அதன் மூலமாக இராணுவ ஆட்சியைக் கொண்டுவந்து, மீண்டும் கோட்டாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டுவரலாம். மாலைகளைப் போடலாம் என அட்மிரல் சரத் வீரசேகர காத்திருக்கிறாரா என்பது தெரியவில்லை. ஆட்சிமாற்றத்திற்காகக் கூட இவ்வாறான நாடகங்களை நடாத்தலாம்.

நல்லாட்சி அரசாங்கம் இருக்கின்றபோது வடக்கு மற்றும் கிழக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகள் அமைப்பு என்கிற திட்டத்தினைத் தீட்டியிருந்தார்கள். அந்த நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சிப் பதவியினைக் கொடுத்து அவர்களையும் வாயடைக்க வைத்துவிட்டார்கள். சிங்கள பௌத்தர்களும் பௌத்த தேரர்களின் உதவியுடன் முப்படைகளின் உதவியுடன் ஆங்காங்கு பௌத்த விகாரைகளை வடக்கு கிழக்கில் வைத்துக்கொண்டே உள்ளார்கள்.

மறுபக்கத்தில் கிறீஸ்தவ மதப் போதகர்கள் தமது மதத்தினை பரப்புவதற்காக மதமாற்றங்களைச் செய்கிறார்கள் என அவர்களுக்கு எதிராக மறவன்புலவு சச்சிதானந்தம், இன்னும் பல ஆதீனங்கள் மதமாற்றத்திற்கு எதிராக செயற்பட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் பௌத்தமயமாக்கல் சத்தமில்லாமல் வடக்கு கிழக்கில் நடந்தேறி வருகிறது.

பௌத்தர்கள் இல்லாத இடத்தில் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்து இராணுவத்திற்காக பாரியளவில் நிரந்தரமாக விகாரைகளைக் கட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிப் பட்டவர்களுக்கு நிச்சயம் மக்கள் வாய்க்கரிசி போடுவார்கள். அதில் மாற்றுக்கருத்தில்லை. சரத் வீரசேகர போன்றவர்கள் இன்று அரசாங்கத்தை, பௌத்த தேரர்களை உசுப்பேற்றி, பௌத்த அமைப்புக்களை உசுப்பேற்றிவிடலாம் என நினைக்கிறார்கள். தெற்கில் வந்து தமிழர்கள் ஆலயங்களைக் கட்டுவதற்கு, இவர் கூறுவதைப்போல சிங்கள மக்கள் சம்மதிப்பார்களா?. அப்படிச் செய்தால் தமிழர்களுக்கும் - சிங்களவர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம். நீங்கள் தவறு செய்கிறீர்கள் என்பதற்காக தமிழ் மக்களையும் தவறு செய்யத் தூண்டுகிறார்கள் இந்த சரத் வீரசேகர போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள். தெற்கில் உள்ள ஆலயங்கள் தமிழர்கள் வாழ்ந்த பூர்வீகப் பிரதேசங்கள் என்பதை இவர்கள் நினைவிற் கொள்ளவேண்டும். இன்று வரலாறு அழிக்கப்பட்டு புனைவுபடுத்தப்பட்டிருக்கலாம் என்பதற்காக உண்மை ஒருபோதும் மரணிக்காது. அநுராதபுரம் தமிழர்களின் பூர்வீகம். இந்துக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. சைவ மக்கள் தமது வழிபாட்டிற்காக கட்டிய சிவாலயங்கள் தெற்கில் இன்றும் இருக்கின்றனவே. அங்கிருந்த சைவ ஆலயங்கள் அடித்து நொறுக்கப்பட்டு இன்று பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. அங்கிருந்த பல தமிழ்க் கிராமங்கள் இன்று காணாமல் ஆக்கப்பட்டுள்ளன. வாழ்ந்த மக்களை திட்டமிட்டு கலவரங்களை உருவாக்கி, அடித்துவிரட்டியும் கைது செய்தும், கொலை செய்த வரலாறுகள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் சரத் வீரசேகர போன்ற இனவாதப் போக்குடையவர்கள் அறியவேண்டும். வரலாற்றை அறியாமல் கருத்துக்கள் கூறுவதால் உண்மைகள் பொய்யாக மாறிவிடாது.

ஆகவே எல்லோரும் அந்தந்த மதங்களை வழிபட இந்த நாட்டில் உரிமை உள்ளது. அதற்காக பௌத்த ஆதிக்கத்தை ஏனைய மக்கள் வாழும் இடங்களில் திணிக்க முற்படக்கூடாது. அப்போதுதான் பிரச்சினைகள் எழுகின்றன. ஏற்கனவே இந்த நாட்டில் இனப்படுகொலைக் குற்றவாளிகளாக சர்வதேச அளவில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் மஹிந்த ராஜபக்ச தரப்பினர், இன்று தாம் யாரால் அரசர்களாகக் கொண்டாடப்பட்டோமோ அவர்களாலேயே வீதியில் தூக்கியெறியப்பட்டார்கள். ஒரு இனக்குழுமத்திற்குச் செய்த அநியாயம் அவர்களை இந்த நாட்டை ஆளவும் நிம்மதியாக விடவில்லை. முப்படைகளையும் தமது அதிகாரத்தின் கீழ் வைத்துக்கொண்டு, தமிழ் மக்களுக்குச் செய்த பழி பாவம் இன்றுவரை அந்தக் குடும்பத்தினரை விரட்டிக்கொண்டிருக்கிறது. இன்றும் வெளியில் சுதந்திரமாக தலைகாட்ட முடியாமல், வீடுகளுக்குள் பதுங்கியிருக்கும் அவர்கள் மாத்திரமல்ல, இந்த நாட்டில் இனவாதம் பேசி, அக்கிரமங்களைச் செய்யும் யாராகவிருந்தாலும் அதற்குரிய கூலியினைப் பெற்றே ஆகவேண்டும் என்பது நியதி. அடுத்த தலைமுறையாவது இவர்களை வீதிக்கு இழுத்துவந்து கேள்வி கேட்கும் நிலை வரும்.

இவர்கள் செய்யும் அநியாயங்களைக் கதைக்கப் போனால், ஊடகங்களை அச்சுறுத்துவதும், தனிநபர்களை விசாரணைக்கு அழைப்பதும், அச்சுறுத்தலுக்குள்ளாக்குவதும் என இவர்களின் செயற்பாடுகள் தொடர்கின்றதே தவிர, நாடு வளம்பெற செய்யவேண்டியவற்றை, நல்லிணக்கம் ஏற்படுவதற்குரிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் கையில் எடுக்கவில்லை. ஏதாவது பேசி, செய்து ஆட்சியைத் தக்கவைப்பதில் மாத்திரம் குறியாக இருக்கின்றனர். பௌத்தமயமாக்கலைச் செய்வதை குறியாக வைத்துள்ளனர். மக்களைக் குழப்பி மீண்டும் வடகிழக்கில் இனமுறுகலைத் தோற்றுவித்து, கலவரங்களை ஏற்படுத்துவதே சரத் வீரசேகர போன்றவர்களின் பிரதான நோக்கம். இவ்விடயத்தில் தமிழ் மக்கள் மிகக் கவனமாக இருக்கவேண்டும். வடக்கு மற்றும் கிழக்கில் அரசினால் திட்டமிட்டு தொடரும் பௌத்தமயமாக்கலின் தீவிரத்தன்மையை உணர்ந்து, தமிழ் அரசியல்வாதிகள் இனியாவது ஒற்றுமைப்படுங்கள்.

**மறவன்**

# பிராந்திய செய்திகள்

## மே மாத இறுதிக்குள் உரத்திற்கான வவுச்சர்கள்

உரத்திற்கான வவுச்சர்கள் மே மாத இறுதிக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இந்த வவுச்சர்கள் அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத்திற்கு வழங்கப்படும். அவற்றை 10 நாட்களுக்குள் அச்சடித்து முடிக்க முடியும். இந்த வவுச்சர்களை குறிப்பாக பண்டி உரம் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தவும். அத்துடன் இந்த வவுச்சர் ஊடாக விருப்பமான உர வகைகளை கொள்வனவு செய்ய முடியும் என்றும் கூறினார்.

மேலும், இம்முறை சிறுபோக பயிர்ச்செய்கைக்கு தரமான விதைகளைப் பயன்படுத்துமாறும், அதனூடாக அதிக விளைச்சலை பெற முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அதேபோன்று, விளைச்சலுக்கு தேவையான கலைக்கொல்லிகள் மற்றும் கிருமி நாசினிகள், தனியார் நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்படும். அவற்றை குறைந்த விலையில் வழங்க அந் நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் சலுகையினால் விவசாய உபகரணங்களின் விலைகள் குறைந்துள்ளன. தற்போது உரங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. உரங்களை சந்தையில் இருந்து குறைந்த விலைக்கு கொள்வனவு செய்ய முடிகிறது. இதனூடாக எதிர்காலத்தில் வெற்றிகரமான சிறு போக பருவத்தை எதிர்பார்க்கலாம் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். மேலும், எதிர்காலத்தில் பாஸ்மதி அரிசி மட்டுமே இறக்குமதி செய்யப்படும். ஏனைய அரிசி வகைகள் இறக்குமதி செய்யப்பட மாட்டாது. அரிசி உற்பத்தி அதிகமாக இருப்பதால், கால்நடை உணவிற்கு பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## சம்பியனானது பஹ்ரியா, இரண்டாமிடம் கல்முனை மிஸ்பாஹ் வசமானது



கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று இறுதி நாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை (12) கோலாகலமாக நடைபெற்றது.

வைபகரீதியாக இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கோட்டமட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் நிர்வாக பிரதிக்கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர், கல்முனை கல்வி மாவட்ட பிரதம பொறியலாளர் ஏ.எம்.ஸாஹிர், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ், கல்முனை மாநகர உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அசீம், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம்.சாஜித் உட்பட பிரமுகர்கள் பலரும் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

கல்முனை கோட்டத்தில் உள்ள கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதுடன் 125 போட்டி நிகழ்சிகள் நடைபெற்று வெற்றிபெற்ற வீரர்கள் இறுதிநாள் நிகழ்வில் பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்களின் கண்கவர் அலங்கார அணிவகுப்புக்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்ற இறுதிநாள் நிகழ்வில் கோட்டத்தின் அதிபர்கள், பாடசாலைகளின் பிரதிநிதிகள், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர். புள்ளிகளின் அடிப்படையில் இந்த வருடம் பவளவிழா காணும் கல்முனை கமு/கமு/ அல்- பஹ்ரியா மகா வித்தியாலயம் கோட்டத்தின் சம்பியன் பட்டத்தையும், இரண்டாம் இடத்தை கல்முனை கமு/கமு/அல்- மிஸ்பா மகா வித்தியாலயம் தனதாக்கி கொண்டது குறிப்பிடத்தக்கது. (நூருல் ஹுதா உமர்)

## ஊடகவியலாளர்களின் நலன் கருதி உதவிகள் வழங்கி வைப்பு

ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நீதிக்கான மய்யத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிக்கான மய்யத்தின் சாய்ந்தமருது காரியாலயத்தில் புதன்கிழமை (11) மாலை இடம்பெற்றது. சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் விடுத்தவேண்டுகோளை ஏற்று நீதிக்கான மய்யத்தினால் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மேற்படி நிகழ்வானது நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்றதுடன் நீதிக்கான மய்யத்தின் பிரதித் தலைவர் யூ.கே.எம்.றிம்சான், பொருளாளர் ஏ.ஏ.அஷ்ரஃப் அலி, சட்டத்தரணி எம்.ஷிபான், சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பொதுச் செயலாளர் ஏ.எல்.எம்.முஜாஹித், பொருளாளர் நூருல் ஹுதா உமர், பிரதித் தலைவர் எஸ்.அஷ்ரஃப்கான், பிரதிச் செயலாளர் எம்.எம்.ஜபீர், செயற்குழு உறுப்பினர்களான எம்.வை. அமீர், எஸ்.ஜனூஸ் உள்ளிட்ட ஊடகவியலாளர்களான அஸ்லம் எஸ்.மௌலானா, பாறூக் ஷிஹான் ஆகியோர் கலந்துகொண்டனர். இது தவிர நீதிக்கான மய்யத்தினால் கடந்த காலங்களில் தெரிவு செய்யப்பட்ட தமிழ், முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கு "மகிழும் இதயம்" திட்டத்தினூடாக கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பாறுக் ஷிஹான்)

## டெங்கு : மே 16, 17 இல் விசேட செயற்திட்டம்

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் பரம்பல் அதிகரித்து வருகின்ற நிலையில், தற்போதைய வானிலை காரணமாக டெங்கு நோய் பரப்பும் நுளம்புகள் அதிகரிப்பதற்கு அபாயநிலை காணப்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு மே மாதம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டத்தில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்திட்டத்தினை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கையினை முன்னெடுக்காதுவிடின் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அடுத்துவரும் மாதங்களில் அதிகரித்துச் செல்லும் என அஞ்சப்படுகின்றது. சுகாதார திணைக்களம், உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகம் இணைந்து கழிவு நீர் தேங்கிநிற்கும் பொருட்களை உரிய முறையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இச் செயற்திட்டம் தொடர்பான கால அட்டவணை கிராமசேவகர் ஊடாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும். எனவே பொதுமக்கள், பொது அமைப்புக்கள் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாவட்ட செயலகத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## கடற்றொழிலாளர்களுக்கு நான்காம் கட்ட நட்ட ஈடு வழங்கிவைப்பு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நான்காம் கட்ட நட்டஈடாக சுமார் 160.5 கோடி ரூபாய்க்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு (11) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவின் பங்கேற்புடனும் கடற்றொழில் அமைச்சில் நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சின் முயற்சியினால், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடற்றொழில் மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டதன் காரணமாக தமது வாழ்வாதாரத்தை இழந்த 15,000 கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்றொழில் சார்ந்த தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த சுமார் 5,000 பேருக்கான நட்டஈடு இம்முறை வழங்கப்படவுள்ள நிலையில், இன்றைய தினம் 30 பேருக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கு காசோலைகள், சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கி வைக்கப்படவுள்ளன.

குறித்த கப்பல் விபத்தினால் கடலில் கலக்கப்பட்ட பல்வேறு கழிவுப் பொருட்களினால் வலைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக 20 கடற்றொழிலாளர்களுக்கு கப்பலின் காப்புறுதி நிறுவனத்தின் நட்டஈட்டுத் தொகையும் இதன்போது வழங்கப்பட்டது. இதுவரை கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக கப்பல் காப்புறுதி நிறுவனத்தினால் 3068 மில்லியன் ரூபா (ரூ. 300 கோடிக்கும் அதிக தொகை) வழங்கப்பட்டுள்ளதுடன் முதல் மூன்று கட்டங்களில் 1463 மில்லியன் ரூபா (ரூ. 146 கோடி) வாழ்வாதாரத்தை இழந்த கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நான்காம் கட்ட நட்டஈட்டு கொடுப்பனவிற்காக கப்பல் காப்புறுதி கம்பனியால் இலங்கை அரசுக்கு 1605 மில்லியன் ரூபா (ரூ. 160.5 கோடி) வழங்கப்பட்டுள்ளதுடன், நான்காம் கட்டம் நிறைவடையும் போது வாழ்வாதாரத்தை இழந்த கடற்றொழிலாளிக்கு, தொழில்முறையின் பிரகாரம் தலா ரூ. 112,500 முதல் ரூ. 295,000 வரை கிடைக்கவுள்ளது.

சுமார் 22 நாட்கள் மீன்பிடி தடை விதிக்கப்பட்ட நீர்கொழும்பு களப்பில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் ஆகக் குறைந்தது ரூ. 45,000 நட்டஈட்டுத் தொகை கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை, கடற்றொழில் சார்ந்த தொழில்களை மேற்கொள்ளும் மீன் வியாபாரிகள், கருவாடு உற்பத்தியாளர்கள், மீன்பிடி வலை விற்பனையாளர்கள், படகு திருத்துனர்கள் போன்றோருக்கு மீன்பிடித் தடையால் ஏற்பட்ட பாதிப்பிற்காக அவர்களது தொழில் முறைகளின் பிரகாரம் தலா ரூ.22,500 முதல் ரூ.336,000 வரை நட்டஈடு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பேர்ள் எக்ஸ்பிரஸ் கப்பல் விபத்தினால் கடற்றொழிலாளர்களுக்கு நேரடியாக ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காக கடற்றொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினால் தயாரிக்கப்பட்ட 06 அறிக்கைகள் கடற்றொழில் அமைச்சினால் காப்புறுதி நிறுவனத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

முதலாவது அறிக்கை விபத்து ஏற்பட்டு இரண்டு வாரங்களில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 06 ஆவது அறிக்கை கடந்த 2022 ஜூலை மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. இக்குழுவினால் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கை, குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளருமான தம்மிக ரணதுங்க மற்றும் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த ஆகியோரினால் கடற்றொழில் அமைச்சரிடம் இந்நிகழ்வில் கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, மேலதிக செயலாளர் நாமல் தலங்கம, கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

# சினி துளிகள்



## 100 மில்லியன் பார்வையாளர்களை கவர்ந்த பாடல்



என்னை நோக்கி பாயும் தோட்டா', 'கிடாரி', 'நிமிர்' உள்ளிட்ட பல படங்களுக்கு இசையமைத்தவரும் நடிகருமான தர்புகா சிவா இயக்கி இசையமைத்த படம் முதலும் நீ முடிவும் நீ.

இதில் கிஷன் தாஸ், அம்ரிதா மாண்டரின், பூர்வா ரகுநாத் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.

உணர்வுகளையும், இன்றைய சிறுவர்களின் மன நிலையை பிரதிபலிக்கும் வகையில் உருவாகியிருந்த இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இப்படத்தில் இடம்பெற்ற முதல் நீ முடிவும் நீ பாடல் ரசிகர்களை கவர்ந்து சூப்பர் ஹிட் ஆனது.

இந்நிலையில் முதல் நீ முடிவும் நீ பாடல் யூடியூபில் 100 மில்லியன் பார்வைகளை கடந்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

தாமரை எழுத்தில் சித் ஸ்ரீராம், தர்புகா சிவா குரலில் வெளியான இந்த பாடல் 100 மில்லியன் பார்வையாளர்களை கடந்துள்ளதை ரசிகர்கள் இணையத்தில் கொண்டாடி வருகின்றனர்.

## படப்பிடிப்பை தொடங்கிய பிரித்விராஜ்



மலையாள திரையுலகின் முன்னணி நடிகர் பிரித்விராஜ் "ஜெய ஜெய ஜெய ஹே" படத்தை இயக்கிய விபின் தாஸ் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கிறார்.

இந்த படத்திற்கு "குருவாயூர் அம்பல நடையில்" என்று தலைப்பு வைத்துள்ளனர்.
இந்த படத்துக்கு கேரளாவில் உள்ள இந்து அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தது.

தெய்வத்தின் பெயரை படத்திற்கு வைத்து கேலி செய்வதற்குத் திட்டமிட்டால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று மிரட்டல் விடுத்தனர்.

படத்தின் பெயரை காரணமாக வைத்து பிரித்விராஜுக்கு மிரட்டல் விடுப்பதை ஏற்க முடியாது என்று மலையாள பட உலகினர் கண்டனம் தெரிவித்து வந்தனர்.


இந்நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. இதனை நடிகர் பிரித்விராஜ் தனது இணையப் பக்கத்தில் புகைப்படங்கள் மூலமாகப் பகிர்ந்து தெரிவித்துள்ளார்.

## தி கேரளா ஸ்டோரி படத்தை எதிர்ப்பவர்கள்தான் தீவிரவாதிகள்

தி கேரளா ஸ்டோரி திரைப்படம் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தினாலும் கணிசமான வசூலை பெற்று வருகிறது. நடந்தது உண்மையா அல்லது கற்பனையா என்பதைத்தாண்டி ஒரு கதையாக இந்தப்படத்தைப் பார்க்க பலரும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

திரையிட்ட இடங்களில் ஓரளவுக்கு வசூலை கொடுத்து வருகிறது. இந்த நிலையில் படத்திற்கு எதிராக கருத்து தெரிவித்து வருபவர்களை கடுமையாக சாடியிருக்கிறார் நடிகை கங்கனா ரணாவத்.
இது பற்றி அவர் கூறியிருப்பதாவது, இப்படத்தை நான் இன்னும் பார்க்கவில்லை. படத்தை தடை செய்யவேண்டும் என பல தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தடை செய்ய உயர்நீதிமன்றம் மறுப்பு தெரிவித்து ஆதரவு அளித்துள்ளது என்றால் அதை நிச்சயம் ஏற்று கொள்ளத்தானே வேண்டும்.

ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற தீவிரவாத அமைப்பினரை தவிர வேறு யாரையும் தவறாக சித்தரிக்கவில்லை என நினைக்கிறன். அப்படி அது உங்களை பாதிப்பதாக நினைத்தால் நீங்கள் தான் தீவிரவாதி என்று பேசியிருக்கிறார்.



## அடுத்த படத்திற்கான பணியில் மும்முரம் காட்டும் பார்த்திபன்

இயக்குனர், நடிகர் என பன்முகத்தன்மை கொண்டுள்ள பார்த்திபன் பல படங்களை இயக்கி மக்கள் மத்தியில் தனக்கான இடத்தை பிடித்தவர். இவர் இயக்கிய ஒத்த செருப்பு திரைப்படம் பல விருதுகளை பெற்று இந்திய திரையுலகின் கவனத்தை ஈர்த்தது.

இவர் கடைசியாக இயக்கிய இரவின் நிழல் திரைப்படம், நான் லீனியர் திரைக்கதை முறையில் ஒரே ஷொட்டில் எடுக்கப்பட்ட உலகின் முதல் படம் என்ற பெருமையை பெற்றது.

சில தினங்களுக்கு முன் மணிரத்னம் இயக்கத்தில் பார்த்திபன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த 'பொன்னியின் செல்வன் -2' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

சமீபத்தில் இந்த ஆண்டு புதிய படம் இயக்கவுள்ளதாக பார்த்திபன் அறிவித்திருந்தார். இந்நிலையில், இப்படத்தின் பணியில் பார்த்திபன் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது சமூக வலைதளத்தில், படப்பிடிப்பிற்கான இடங்கள் பார்ப்பதாகவும் விரைவில் அறிவிப்பு வெளியாகும் என புகைப்படம் ஒன்றை பகிர்ந்து தெரிவித்துள்ளார்.

## அரசியலில் குதிக்கும் நடிகர் தாடி பாலாஜி



பிளஸ்-2 தேர்வில் திண்டுக்கல் மாணவி நந்தினி 600-க்கு 600 மதிப்பெண் எடுத்து வரலாற்று சாதனை படைத்தார். இவருக்கு பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர்.


இதையடுத்து தமிழ் பாடத்தில் முதலிடம் பிடித்த மாணவி லக்ஷயா ஸ்ரீயை நடிகர் தாடி பாலாஜி அரக்கோணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து பாராட்டியுள்ளார்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தாடி பாலாஜி கூறியதாவது, லக்ஷயா ஸ்ரீயை நேரில் சந்தித்து வாழ்த்துகிறேன் என்று கூறினேன். அதன்படி நேரில் சந்தித்து வாழ்த்திவிட்டேன். அவரது கல்விக்கான சிறிய உதவிகளை நான் செய்கிறேன் என்று கூறியுள்ளேன்.

தமிழக அரசும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேசும் கல்வித்துறையில் மாணவ, மாணவிகளுக்காக பல நலத்திட்ட உதவிகளை கொண்டு வருகிறார்கள். இந்த வாய்ப்பினை மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விரைவில் நான் அரசியலுக்கு வருவேன், வந்தால் நல்ல விஷயங்கள் பல செய்வேன். தனியாக கட்சி ஆரம்பிக்கும் ஆசை இல்லை. எனக்கான அங்கீகாரம் கிடைக்கும் இடத்தில் நான் வேலை செய்ய தயாராகவுள்ளேன் என்று கூறினார்.

## உலக சுற்றுலா செல்லும் அஜித்



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித் பைக் மூலம் இந்தியாவைச் சுற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதில் முதல்கட்டமாக இமயமலையில் கடந்த ஆண்டு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

பனி படர்ந்த பல்வேறு பகுதிகளில் பைக்கில் நண்பர்களுடன் பயணம் செய்த வீடியோ காட்சிகள் இணையத்தில் வைரலாக பரவி வந்தது.

தற்போது அஜித்தின் விடாமுயற்சி திரைப்படத்தின் தொடக்க வேலையில் இருப்பதால் 2-ம் கட்ட பைக் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் அஜித் தற்போது மீண்டும் உலக சுற்றுலா செல்லவுள்ளார். அஜித் உலக சுற்றுலா செல்லவுள்ள பகுதி குறித்த மேப் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதனை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

20



விடுதலைப்புலிகளின் கடற்படை தளங்கள் வடமராட்சி கிழக்கு பகுதியிலேயே அதிகளவில் செயற்பட்டுக் கொண்டிருந்தன. வடமராட்சி கிழக்கில் சுண்டிக்குளம், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, தாளையடி போன்ற பகுதிகளில் கடற்புலித்தளங்கள் செயற்பட்டு கொண்டிருந்தன. இந்தபகுதிகள்மீது வேவு விமானங்கள், கண்காணிப்பை மேற்கொண்ட சிறிலங்கா காலி துறைமுக தாக்குதலின் பின் இத் தளங்கள் மீது கடுமையான தாக்குதலை நடத்தியது.

அத்துடன் முல்லைத்தீவில் இயங்கிக்கொண்டிருந்த சாலை கடற்புலிகளின் தளங்கள் மீது தனது தாக்குதலை கடுமையாக நடத்தியிருந்தன. இதன்போது கடற்புலிகளின் கலங்கள் சிலவும் களஞ்சியங்கள் மற்றும் படகுகளும் சேதமடைந்தன. வடமராட்சி கிழக்கில் கடற்புலிகளின் எரிபொருள் களஞ்சியம் ஒன்றும் விமான தாக்குதலுக்கு இலக்காகி தீப்பற்றி எரிந்தது.

படையினரின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு மத்தியிலும் கடற்புலிகளின் பலம் பெருகிக் கொண்டுதான் இருந்தது. புதிதாக இணைந்த போராளிகள் சிலர் பயிற்சிகளை நிறைவுசெய்து இருந்தனர்.

அதிகரித்திருந்த பலத்தினை கொண்டு புதிய படையணிகள் உருவாக்கப்பட்டன. அதில் முக்கியமானது கடற்புலிகளின் ஈரூடக படையணி.

கடற்புலிகளின் சிறப்பு தளபதி சூசை அவர்களின் மேற்பார்வையில் கடலிலும் தரையிலும் சென்று தாக்கக்கூடிய வல்லமை படைத்த சகல ஆயுதங்களையும் கையாளத்தக்க வகையில் ஈருடக படையணி உருவாக்கம் பெற்றிருந்தது.

இந்த அணியின் பரிச்சய களமாகவும் முதல் களமாகவும் மண்டைதீவு அமைந்திருந்தது. (2006)ம் ஆண்டின் இறுதி காலப் பகுதியில் இந்த தாக்குதல் இடம் பெற்று இருந்தது. இதன் பின்னர் (2007)ம் ஆண்டு மே மாதம் (27)ம் திகதிமேற்கொள்ளப்பட்ட நெடுந்தீவு கடற்படை தளம் மீதான தாக்குதல் இவர்களின் முதல் வெற்றிகரமான தாக்குதலாக கொள்ள முடியும்.

ஆழ கடற்பகுதியில் கடற்படை யினருக்கு மிகவும் சாதகமாக இருந்த நெடுந்தீவின் இரு பெரும் கடற்தளங்களில் ஒன்றான தென்பகுதி தளமான குயின்ரக் தளத்தை விடுதலைப்புலிகளின் ஈருடக படையணியினர் முற்றாக தாக்கியளித்து இருந்தனர்.

அதாவது பூநகரி கடற்கரை பகுதியை தளமாகக்கொண்டு சுமார் முப்பது கிலோ மீற்றர் தொலைவிற்கு அப்பால் நெடுந்தீவு கடற்படை தளத்திற்கு சென்று தாக்குதல் நடத்திவிட்டு மீள திரும்பி வருவதென்பது ஆச்சரியத்துக்குரிய விடயம். சாதனைக்குரிய விடயமாகவும் இருந்தது.

எனினும் அவ்வளவு தூரத்திற்கு சென்று தாக்குதலை நடத்தியதுடன், சுமார் இரண்டு மணிநேர கடும் சமரின் பின்னர் முகாமை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அதனை முழுமையாக அழித்துவிட்டு திரும்பியிருந்தனர்.

இத்தாக்குதலை முறி யடிப்பதற்காக காங்கேசன்துறை மற்றும் காரைநகர் கடற்படை தளங்களிருந்து டோரா மற்றும் நீருந்து விசைப்படகுகளில் சிறிலங்கா கடற்படையினர் பெருமளவில் உதவிக்கு வந்தபோதும் கடலில் இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வழிமறிப்பு தாக்குதலால் டோரா ஒன்றும் நீருந்து இரண்டு விசைப்படகுகளும் சேதமடைய தமது இலக்கினை அடைய முடியாமல் கடற்படையினர் திரும்பி சென்றனர்.

சுமார் நாற்பது வரையான கடற்படையினர் கொல்லப்பட்ட இத் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர். அத்துடன் பெருமளவு ஆயுத தளபாடங்கள் பெருமளவில் கைப்பற்றப்பட்டன.

இந்த தாக்குதலின் பின்னர் ஈருடக படையினரின் முக்கிய தாக்குதலாக சிறுத்தீவு தாக்குதலை கொள்ள முடியும். நெடுந்தீவு கடற்படை தளம் அழிக்கப்பட்டு சரியாக ஓராண்டில் இத்தாக்குதல் நடத்தப்பட்டு இருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுத்தீவு யாழ் குடாவில் மக்கள் வசிக்காத தீவுகளில் ஒன்றாக இருக்கின்றது.

எப்போதும் குறிப்பிட்டளவு கடல் நீர் நிற்கும் இத்தீவில் கடல் கண்காணிப்புக்காக சிறிலங்கா படையினர் பலமான முகாம் ஒன்றை அமைத்திருந்தனர். யாழ்ப்பாணத்துக்கான கடல்வழியான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தளமாக இருந்த இத்தீவினை சுற்றி பலத்த கண்காணிப்பு போடப்பட்டு இருந்தது.

இத்தீவை சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு இருந்ததுடன், ராடர் அவதானிப்புக்களும், காவல் நிலைகளும் அமைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. அத்துடன் இதற்கு மிக அருகாமையில் இருந்த மண்டைதீவில் சிறிலங்கா படையினரின் பாரிய வேவுசுமண தளம் அமைந்திருந்தது. இதிலும் ராடர் தளமும் கடற்கலங்களின் தளமும் அமைந்திருந்தது.

யாழ் கடல் நீரேரியின் முழுமையான பாதுகாப்பை இந்த இரு தளங்களும் தான் உறுதிப்படுத்தி வந்தன. எனவே சிறுத்தீவு மீது தாக்குதல் நடத்தினால் மண்டைதீவில் இருந்து படையணிகள் உதவிக்கு வருவது மிக இலகுவாக இருந்தது.

அத்துடன் யாழ்குடாவில் நிலைகொண்டிருக்கும்படையினரும் எறிகணை தாக்குதல் மூலம் நடவடிக்கையை மேற்கொள்ளவும் உதவிக்கு விரைந்து வரவும் இந்த முகாமிற்கு வசதியும் இருந்தது. இதனால் இம் முகாம் மீது தாக்குதல் என்பது நெடுந்தீவு மீதான தாக்குதலை விடவும் ஆபத்து நிறைந்ததாக கருதப்பட்டது.

எனினும் துணிவு, தந்திரம், வேகம் என்னும் தலைவரின் தாரக மந்திரத்தின் அடிப்படையில் (2008) ம் ஆண்டு மே மாதம் (29) ம் திகதி அதிகாலை கடற்படை தளம் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. நெடுந்தீவு சிறுத்தீவு மீதான தாக்குதலுக்கான திட்டங்களை கடற்புலிகளின் சிறப்பு தளபதி சூசை அவர்களே நேரடியாக நெறிப்படுத்தினார்.

விடுதலைப்புலிகளின் ஈருடக படையணியின் சிறப்பு கொமாண்டோ அணியினர் அதிவேக தாக்குதல் ஒன்றை தொடுத்து முகாமின் தடைகளை உடைத்துக்கொண்டு வேகமாக உள்நுழைந்தனர். சுமார் அரை மணி நேரத்தில் படையினருக்கு இழப்புக்களை ஏற்படுத்தி தளத்தை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

இதன்போது (13) சிறிலங்கா கடற்படையினர் கொல்லப்பட்டனர் பலர் காயங்களுடன் தப்பியோடி இருந்தனர். சில மணி நேரங்கள் முகாமை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததுடன் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த ராடர் மற்றும் ஆயுத தளபாடங்களுடன் மூன்று கடற்படையினரின் உடலங்களையும் கைப்பற்றி கொண்டு முகாமை தகர்த்துவிட்டு சிறப்பு அணியினர் தளம் திரும்பினர். இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகளுக்கு எந்தவித இழப்புக்களும் ஏற்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் சிறுத்தீவு மீதான தாக்குதலால் ஆத்திரமடைந்த படையினர் தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகள் அங்கிருந்து வெளியேறி யாழ் குடாவிற்கு சென்றிருக்கலாம் என்ற அச்சம் காரணமாக தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள குருநகர், பாசையூர் பகுதிகளை இலக்குவைத்து கடும் எறிகணை தாக்குதல்களை நடத்தினார்கள்.

இதன்போதும் ஐந்து பொது மக்கள் கொல்லப்பட்டும் (13) பேர் படுகாயப்பட்டனர். மண்டைதீவு நெடுந்தீவு சிறுத்தீவு என கடற்புலிகளின் ஈருடக படையணியின் வெற்றிகர தாக்குதல்கள் தொடர்ந்துகொண்டு இருந்தன.

குறைந்த அளவு போராளிகளுடன் பெரும் வெற்றிகளை தேடித்தரும் தாக்குதல்களாக ஈருடக தாக்குதல்கள் அமைந்திருந்தன.

இது கடற்புலிகளின் பலத்தை நிரூபிக்கின்றதும் சிறலங்கா கடற்படையினருக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றதுமான தாக்குதல்களாக தொடர்ந்து கொண்டு இருந்தன. இதேவேளை சிறுத்தீவு தாக்குதலுக்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாகத்தான் விடுதலைப்புலிகள் வரலாற்றில் பெரும் இழப்பொன்றை சந்தித்து இருந்தார்கள். அது குறித்து அடுத்த வாரம் பார்ப்போம்.

தொடரும்...

# கட்டாய மதமாற்றத்தை வந்தேறிகளான கிறிஸ்தவர்கள் செய்கின்றார்கள்



கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி:-கிறிஸ்தவமதம்சார்பானஒருவர்,அவர் அரசியலில் இருப்பதாகவும், வெளிநாடுகளில் ஏனைய மதங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அங்கு குழப்பங்கள் ஏற்படுத்தப்படுவதில்லை. ஒழுங்காக எல்லாம் நடைபெறுகிற போது இங்கு மாத்திரம் ஏன் நாங்கள் போதனைகளைச் செய்ய முடியாது மற்றும் தேவாலயங்களை அமைப்பதில் குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகிறது என்கிற கேள்வியினையும் முன்வைத்திருக்கின்றார். இது பற்றி?**

பதில் :- நான் வெளிநாடுகளில் சென்று பார்த்திருக்கிறேன். லண்டன் போன்ற நாடுகளில் எல்லாம் சமய நம்பிக்கை என்பதே இன்றைக்கு இல்லாமல் போய்விட்டது. பெரும்பாலும் பூச்சியம் என்கிற அளவுக்குப் போய்விட்டது. அதனால் தான் அங்கேயுள்ள தேவாலயங்கள் இப்பொழுது மூடப்படுகின்றன. பல தேவாலயங்களை மூடிவிட்டார்கள். நான் கண்கூடாகக் கண்டது. அவ்வாறு மூடப்பட்டுக் கிடக்கிற தேவாலயங்கள் விற்பனைக்கு வருகிறபோது ஏனென்றால் அங்கு கோவில் கட்டுவதற்கான அனுமதி என்பது தேவை. அந்த தேவாலயங்களை வாங்கி எமது சைவர்கள் அங்கே ஆலயம் கட்டுகிறார்கள். அது எந்தவொரு சமயத்தையும் அபகரிக்கிற நோக்கத்தோடு இல்லை. அதை நான் தெளிவாகச் சொல்வேன். நம்முடைய வழிபாட்டுக்கு ஒரு இடம் தேவை என்பதால் தான் எமது சைவர்கள் ஆலயம் கட்டுகிறார்கள். மற்றைய மதத்தை அபகரிக்கும் நோக்கில் வாங்கிக் கட்டப்படுவதில்லை என்பதே உண்மை. எங்காவது இந்து மதக் கோவிலை வைத்து மதமாற்றம் செய்தார்கள் என்பதை நிறுவினால் நாங்கள் தலைகுனிய வேண்டிவரும். நான் இந்தக் கருத்தினை வாபஸ் பெற்றுக்கொள்வேன். அப்படி ஒரு இடத்திலும் நடக்கவில்லை. ஆனால் இதைக் கூறுகிறவர்கள் கட்டுகிற தேவாலயங்கள். அவர்கள் செய்கிற கூட்டங்கள் எல்லாம் மதமாற்றம் என்கிற நோக்கத்தோடு செய்யப்படுகின்றன. அதைத்தான் கண்டிக்கிறோம். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் கிறிஸ்தவர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் வழிபட ஒரு தேவாலயம் தேவை என்று அமைப்பது வேறு. யாரும் இல்லாத ஒரு இடத்தில் தேவாலயம் அமைத்து அதனைச் சுற்றி இருப்பவர்களை கவர்ச்சிபண்ணி, பொருட்களை வழங்கி, உதவிகளைச் செய்து மாற்ற நினைப்பது என்பது வேறு. ஆகவே நீங்கள் கூறிய அந்தப் பாதிரியார் சொன்ன சமாதானம் ஒரு காலமும் செல்லாது. எங்காவது ஒரு இந்து ஆலயம். ஒரு கிறிஸ்தவரை பொருட்களை வழங்கி, மனதை மாற்றி மதமாற்றம் செய்திருக்கிறார்கள் என்பதை நிறுவினால் அதன் பிறகு அவர்கள் நூறு தேவாலயங்களை அமைக்கட்டும். இவர்கள் நடத்துகிற கூட்டங்களில் மதமாற்றம் என்பது பிரதானமானது. அதனைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்.

**கேள்வி :- சாதிப்பாகுபாடு இன்றும் இந்து ஆலயங்களில் பார்க்கப்படுவதாகவும், சைவ சமய மக்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. இதனால் தான் சைவ சமய மக்கள் கிறிஸ்தவ மதத்தினை நோக்கிச் செல்வதாகவும் கூறப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக?**

பதில் :- இதனை நான் நூறு விகிதம் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஆரம்பத்தில் இந்து மதத்திலே சாதிப் பாகுபாடு என்பது இருந்தது. முதலில் அந்த சாதிப் பிரிவுகள் வந்ததன் நோக்கம் என்பது வேறு. அதைப்பற்றி நான் எழுதியிருக்கிறேன். ஆனால் பின்னால் அதைக் கொச்சைப்படுத்தினார்கள். அதாவது தாழ்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதி என்றெல்லாம் பிரச்சினைகள் எழத் தொடங்கின. ஆலய வழிபாட்டில் யாழ்ப்பாணத்தில் கூட அது நடந்திருக்கிறது. அது கண்டிக்கத்தக்க விடயம். அதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. ஆனால் இன்றைக்கு 99 விகிதம் அந்த நிலைமைகள் மாறியிருக்கிறது. அதுவும் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில். போராளிகள் இருந்த காலத்தில் எல்லாம் சாதிப் பாகுபாடு என்பது முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தது என்று தான் நான் நினைக்கிறேன்.

தற்போதும் நடந்துகொண்டிருந்தால் அது மனித மன வக்கிரங்கள் தான். நான் காரைநகரில் சொற்பொழிவு ஒன்றுக்குப்போய் பேசுகிறபோதுஅந்தக்கோவிலுக்கு முன்னேயே ஒரு தேவாலயம் கட்டியிருந்தார்கள். இதை நீங்கள் கொஞ்சம் கண்டித்துப்பேசவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அது ஒரு இருவ நேரம். நான் பேசத்துவங்கும் போது பார்க்கிறேன் தூரத்தில் வயல் வெளி. வயல்வெளியில் வெளிச்சங்கள் வரிசையாகத் தெரிகின்றன. அது என்ன என்று கேட்டால் கையில் லாந்தர் என்று சொல்கிற விளக்கினை வைத்துக்கொண்டு சொற்பொழிவு கேட்கிறார்கள் என்றார்கள். ஏன் அப்படிக் கேட்கிறார்கள் என்றால், அவர்கள் சாதி குறைந்தவர்கள். அவர்களை நாங்கள் இந்தக் கோவிலுக்குள் விடுவதில்லை. அதனால் வரம்பிலே இருந்து கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் மிகுந்த வேதனைப்பட்டு, தேவாலயத்தைக் கண்டிக்கவில்லை. இவர்களைத் தான் கண்டித்துப்பேசினேன். உண்மையான சைவன் என்பவன் அவன் தான். ஏனென்றால் நீங்கள் உங்கள் கோவிலுக்குள் போ என்று விடாமல் துரத்துகிறீர்கள். அவர்கள் கோவில் கட்டி வா என்று வரவேற்கிறார்கள். அந்த வரவேற்பை நிராகரித்துவிட்டு வரம்பிலே குந்தியிருந்து சமயப் பேச்சினை ஒருவன் கேட்கிறான் என்றால் அவன் தான் உண்மைச் சமயி என்று நான் பேசினேன்.

அதனால் சைவக் கோவில் காரர்கள் சிலர் மனம் வருந்தினார்கள். நான் அதைத்தான் சொல்கிறேன். சாதி வேறுபாட்டினைக் கொண்டு இன்றைக்கும் அதனைச் செய்கிறார்கள். சில இடங்களில் அது நடக்கிறது. அது உடனடியாகக் கண்டிக்கப்படவேண்டும். போராட்டம் நடத்துகிறார்கள் என்று சொல்கின்றீர்களே சைவ சமய அமைப்புக்கள் மற்றும் ஆதினங்கள் இவர்கள் எல்லோரும் இணைந்து இதனைக் கண்டிக்கவேண்டும். அந்தக் கோவில்களில் நடக்கின்ற எந்த நன்மை தீமைக்கும் எந்த சைவப் பெரியார்களும் போகக்கூடாது. வேறுபாடு இருந்தால் அப்படிப்போகக்கூடாது. அதை நான் மிகத் தெளிவாக சொல்ல விரும்புகிறேன்.

**கேள்வி :- சாதி குறைந்தவர்கள் இறைவனைத் தொடுவதாலோ அல்லது ஆலயத்திற்குள் வந்து வழிபடுவதாலோ இறைவன் அசுத்தமாகிவிடுவதில்லை. பல இடங்களில் இந்த சாதிப் பிரச்சினைகள் தலைவிரித்தாடுகிறது. வன்னியைப் பொறுத்தவரையில் சாதிப் பிரச்சினைகள் பெருமளவில் இல்லை. அண்மையில் அருண் சித்தார்த் என்கிற ஒருவர் நல்லூர் கோவிலை உடைத்து மலசலகூடம் அமைக்கவேண்டும் என்று பேசியிருக்கிறார். இது குறித்து?**

பதில் :- இதுதான் அந்த வக்கிரபுத்தி. நானும் சித்தார்த்தினுடைய பேச்சைக்கேட்டிருக்கிறேன். அவருடைய கொந்தளிப்பு எனக்குப் புரிகிறது. ஆனால் அந்தக் கொந்தளிப்பை நாகரிகமாக வெளிப்படுத்தத் தெரியவில்லை. அவர் எனக்கு ஒரு தீமை நடந்தால் உன்னை அசிங்கப்படுத்துவேன் என்பதுதான் அவருடைய வாதங்களின் கெட்டித்தனமாக இருக்கின்றது. அதுதான் இந்த நல்லூரை உடைத்து மலசலகூடம் கட்டுவேன் என்பது. உன்னை ஒருவன் அழுக்கு செய்தால் நீ அவனை அழுக்கு செய்துவிட்டால் சமமாகுமா?. அது புரியவேண்டும் அல்லவா. அது நாகரிகம் இல்லையே. இந்த நாகரிகம் இன்மையால் தான் உன்னை நான் ஒதுக்கிவைத்திருக்கிறேன் என்றல்லவா சொல்வார்கள். ஆகவே அது புரியாமல் பேசுகின்றவர்களின் பேச்சை நான் முற்றாக நிராகரிக்கிறேன்.

சாதி வேறுபாடு பார்ப்பது தவறு என்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. நாங்கள் இங்கு கம்பன் கழகம் சார்பாக ஒரு கோவில் அமைத்திருக்கிறோம். இந்தக் கோவிலில் யாரும் சாமியைத் தொட்டுப் பூ வைக்கலாம். மூலஸ்தானத்தில் மட்டும் தவிர்த்திருக்கிறோம். எல்லோரும் சென்று அங்கு செய்யப்போனால் அந்த இடத்தில் சாத்தியமில்லாமல் போய்விடும் என்பதால் மூலஸ்தானத்தை மாத்திரம் தவிர்த்திருக்கிறோம். மற்றையபடி எல்லா சுவாமிக்கும் அவரவரே பூ வைக்கலாம். அவரவரே தீபம் காட்டலாம் என்று அனுமதித்திருக்கிறோம்.

எங்களுடைய சமயத்தில் வழிபாட்டினை நான்காகப் பிரிக்கிறார்கள். சரியை கிரியை யோகம் ஞானம் என்று. முதல் நிலையில் இருப்பவனுக்கு சில கட்டுப்பாடுகள் தேவை. ஐந்தாம் அல்லது ஆறாம் வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்கு சிலது சொல்லிக்கொடுக்கவேண்டும். நீ இப்படித்தான் வரவேண்டும் என்று. இவனே ஒரு பிஎச்டி மாணவனாக மாறிவிட்டால் யாரும் கட்டுப்பாடு விதிப்பதில்லை. அவனாக செயற்படுவான் அவனுக்குத் தெரியும் என்ன செய்யவேண்டும் என்று. ஆரம்ப வழிபாட்டு நிலையில் உள்ளவனுக்கு சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டித்தான் இருக்கிறது. இல்லாவிட்டால் நாங்கள் புனிதமாக கருதும் இடத்தை, பாருங்கள் வார்த்தையால் பெரிய ஆலயத்தை புனிதங்கெடப்பண்ணிவிட்டார். இந்த வார்த்தையினை கேட்கிறபோதே காது கூசுகிறது. இவருக்கு எப்படி அந்த வார்த்தை வாயில் இருந்து வந்தது என்று தெரியவில்லை. திருவள்ளுவர் சொல்கிறார் ஒழுக்கமுடையவர்கள் தீயவற்றை வழுக்கிக்கூட அவர்கள் வாயிலிருந்து வராது என்கிறார். ஆகவே ஆரம்ப நிலையில் சில கட்டுப்பாடுகளை விதிப்பதில் தவறில்லை என்றுதான் நினைக்கிறேன். அந்தக் கட்டுப்பாடு குறிப்பிட்ட சாதியினருக்காக இருக்கக்கூடாது. எல்லோருக்குமாக இருக்கவேண்டும். அதன் பின்னர் வளர்ச்சிபெற்று வழிபாட்டில் உயர்நிலைக்கு வருகிறபோது யாரும் எதையும் தொடலாம். இதுதான் நிலைமை. இந்து மதம் இதைத்தான் சொல்கிறது.

**கேள்வி :- அரசியல் துறைப் பொறுப் பாளராகவிருந்த தமிழ்ச்செல்வனுக்கு கூட நல்லூரிலே தடை விதிக்கப்பட்டது. சாதிய வாதத்தை எப்படி இல்லாமல் செய்வது? அல்லது ஓரளவேனும் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?**

பதில் :- நீங்கள் சொன்ன தமிழ்ச்செல்வனுக்கு நல்லூரில் தடை என்பது தமிழ்ச்செல்வனுக்கான தடை அல்ல. ஒட்டுமொத்தமானவர்களுக்குமான தடை. ஜனாதிபதி வந்தாலும் பிரதமர் வந்தாலும் அங்கு அதுதான் நிலைமை. அதில் யாருக்கும் வேறுபாடு காட்டப்படவில்லை. நீங்கள் சொல்வது சில ஆலயங்களில் வேறுபாடு காட்டப்படுகிறது. குறிப்பிட்ட சாதியினர் வரக்கூடாது என்று. கரவெட்டியில் ஒரு கோவிலில் நான் பேசப்போனபோது நான் மிகுந்த அறுவருத்தும் வியந்தும் போனேன். என்னை கோவிலுக்குள் வரச்சொன்னார்கள். உள்ளே கூட்டிப்போனார்கள். போனால் கோவிலுக்குள் ஒருவரும் இல்லை. பூசை செய்கிற அந்தணர் இருக்கிறார். என்னைக் கூட்டிப்போன தர்மகர்த்தா இருக்கிறார் நான் இருக்கிறேன். எனக்கு வியப்பாக இருந்தது. வெளியில் நிறைய கூட்டம் இருக்கிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்கள் இந்த சாதிப் பிரச்சினை வந்தபோது ஊர்கூடி முடிவு செய்தார்களாம். கோவிலுக்குள் ஒருவரும் போவதில்லை என்று. அதனால் எல்லோரும் வெளியில் நிற்கிறார்கள். உயர் ஜாதி தாழ்ந்த ஜாதி என. இந்த அறியாமையினை என்னால் விளங்கவே முடியவில்லை. அதாவது அவன் போகக்கூடாது அதுதான் நோக்கம். அதனால் தான் நீயும் போகாதே நானும் போகமாட்டேன். இந்த அசிங்கங்கள் நடக்கத்தான் செய்கிறது.

ஒருவிதத்தில் உயர் ஜாதியினர் தமது கொள்கையில் உறுதியாக இருந்தால் ஒரு வகையில் மகிழ்வடையலாம். கொள்கையில் உறுதியாக இருக்கிறார்களே என்று. ஆனால் எனக்குத் தெரியும் பலர் உயர் ஜாதியினர் வெளிநாடுகளுக்குச் சென்றவுடன் அங்கு இந்த ஜாதி ஒன்றும் பார்ப்பதில்லை. எல்லோரும் எல்லாரையும் திருமணம் செய்கின்றார்கள். அதைவிட வெளிநாட்டினர் என்று கூறப்படும் ஆபிரிக்கர்கள் வெள்ளையர்களைக் கூட திருமணம் செய்துவிட்டு, பெருமையாக எனது மகன் அல்லது மகள் வெள்ளைக்காரரை திருமணம் செய்திருக்கின்றனர் என பேசி மகிழ்வடைகின்றனர். இவர்கள் என்ன ஜாதி என்பது இவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அவர்களின் கொள்கையில் கூட உறுதிப்பாடு. உண்மை என்பது இல்லை. அதனாலே இந்த பொய்மை கட்டாயம் ஒழியும். உலகில் கெட்டவர்களை விட நல்லவர்கள் தான் அதிகம். இன்றுவரை அதிகம்.

சாதி ஒழிப்பு என்று தனிச்சங்கம் எல்லாம் தேவையில்லை. மனித மன வளர்ச்சி தான் தேவை. அதை நாம் எல்லோரும் அறிவுள்ளவர்கள் அதைச் செய்யவேண்டும். ஆனால் மேலோட்டமாக சாதி ஒழிந்துவிட்டதே தவிர யாழ்ப்பாணத்தில் இந்த சாதித் தன்மை என்ற ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அதனை நான் மறுக்கவில்லை. பலகாலம் வேரோடியபடியால் அது முற்றாக நீங்கவில்லை. வெளிப்படையாக நீங்கிவிட்டது. நீ என்ன ஜாதி என்றால் வெள்ளாளர் என்றும் நீ என்ன ஜாதி என்றால் பிராமணன் என்கிறார்கள். ஆனால் சில ஜாதிக்காரர்கள் தங்களது குரலைத் தாழ்த்தி அல்லது மெதுவாக தங்களது ஜாதிகளைச் சொல்கிறார்கள். நான் பறையன் ஜாதி அல்லது டோவி இன்னும் இருக்கக்கூடிய ஜாதிகளை வெளிப்படையாகச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது. தொழில்களை அடிப்படையாக வைத்தே ஜாதிகள் பிரிபட்டிருக்கின்றன. இதில் களவு பொய் என்பதே இல்லை. எல்லா ஜாதிக்காரர்களும் குரலை உயர்த்திக் கூறமுடியும். அந்த நிமிர்வுவேண்டும். இந்தியாவின் தமிழ் நாட்டில் அது வந்துவிட்டது. அங்கு எல்லோரும் தம் தம் ஜாதிகளை பெருமையாகத்தான் கருதுகிறார்கள். யாரும் தாழ்ந்து இருக்கவில்லை. அங்கும் ஜாதிப் பிரச்சினைகள் இருக்கிறது. ஆனால் எல்லா ஜாதிக்காரர்களும் உசாராகிவிட்டார்கள்.

**நேர்காணல் : இரணியன்**

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

முக்கியமாக வருடாவருடம் பல்கலைக்கழகங்களின் ஊடகத் துறையில் இருந்து ஏராளம் மாணவர்கள் வெளியேறுகின்றார்கள். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் 'எரிகின்ற பிரச்சினையையோ' 'அரசியல் சார்ந்த' விடயங்களையோ அறிக்கையிடுவதைத் தவிர்த்து விடுகின்றார்கள். போர்க்காலத்தில் இருந்த அச்சம் இன்றும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. குறிப்பாக பெண்கள் அரசியலில் ஈடுபடக்காட்டும் தயக்கத்தைப் போலவே ஊடகவியலிலும் தயக்கங்களும் பயங்களும் இல்லாமல் இல்லை. அதை ஆர்வம் சார்ந்த பிரச்சினை என்பதைவிட பயம் சார்ந்த பிரச்சினையாகவும், அச்சுறுத்தல் சார்ந்த பிரச்சினையாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்றார் சுயாதீன ஊடகவியலாளர் தமிழ் மதி.

அரசியல்சார் போராட்டங்களைத் தவிர, இராணுவத்துடன் நேரடியாகத் தொடர்புபடும் 'காணிப் பிரச்சினைகளை' செய்தியாக்குவதிலும் அவற்றை ஆதாரப்படுத்துவதிலும் சிறுபான்மை தரப்பின் ஊடகவியலாளர்கள் பெருமளவு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின்றார்கள். வடக்கு கிழக்கில் போர்க்காலத்தில் இராணுவ நிலைகளுக்காக கையகப்படுத்தப்பட்ட 'பூர்வீக' நிலங்களை விடுவிக்க கோரி போருக்குப் பின்னர் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. வலிகாமம், கேப்பாபிலவு போன்ற இடங்களில் நடாத்தப்பட்ட போராட்டங்களின் போது போராட்டங்களில் பங்குபற்றும் மக்களையும், ஊடகவியலாளர்களையும் இராணுவத்தினர் வீடியோக்கள் மூலம் வெளிப்படையாகவே பதிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் பதிவு செய்வதை ஊடகவியலாளர்கள் பதிவு செய்ய முற்படும் போது அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்ச்சியாக பல மக்கள் போராட்டங்களின் போது நடைபெற்று வருகின்றது. கமராவைப் பறிப்பது, தரவுகளை அழிப்பது என்று பல கோணங்களில் இவ் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

போருக்குப் பிறகு, போரில் மாண்ட மக்களை நினைவுகூர்வதில் ஒவ்வொரு அரசாங்கம் மாறும் போது அந்நினைவகூரல் நிகழ்வுகள் அனுமதிக்கப்படும் விதங்கள் மாறுபட்டுக்கொண்டே இருந்தன. இலங்கையில் நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்படும் வரை நினைவுகூரல் நிகழ்வுகள் தடைசெய்யப்பட்டிருந்தன. அந்நினைவுகூரல் நாட்களில் இராணுவ கண்காணிப்புக்களும் கெடுபிடிகளும் அதிகமிருந்தன. அந்நேரத்தில் நடைபெறக்கூடிய நினைவுகூரல் நிகழ்வுகளை அறிக்கையிடும் சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் கண்காணிப்பட்டனர், அச்சுறுத் தப்பட்டனர். அதன் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தின் வருகையோடு கெடுபிடிகள் தளர்த்தப்பட்டு நினைவுகூரல் நிகழ்வுகள் வடக்கு கிழக்கில் நடைபெற்றன. ஆனால், பின்னர் அரசாங்கம் மாறிய போது திரும்பவும் நினைவுகூரல் நிகழ்வுகளுக்கான அனுமதிகள் நெருக்கப்பட்டன. அவ்வேளைகளில் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் இறுக்கப்பட்டன. மாண்டவர்களை நினைவுகூரும் நிகழ்வுகளை செய்தியிடச்சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றன. 2022இல் 'அரகலய' மக்கள் போராட்டத்தின் பின்னர் அரசாங்கத்தில் ஏற்பட்ட பாரிய மாற்றத்தின்பின் அரசாங்கம்நினைவுகூரல் நிகழ்வுகளுக்கு அனுமதித்தது. ஆனால், கண்காணிப்புக்களும் பொலிஸ் கெடுபிடிகளும் இருக்கவே செய்தன என்று ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"நினைவுகூரல்களுக்கான நடைமுறையும் அனுமதியும் ஒவ்வொரு அரசாங்கத்தின் அரசியல் நலன்கள் சார்ந்து பகடையாக முன் நிறுத்தப்படுகின்றது. அது மக்களின் உரிமை சார்ந்த, மானிட அறம் சார்ந்த ஒன்றாக அன்று அரசியல் காரண காரியங்களுக்கு பயன்படுத்துவதைத்தான் காண்கின்றோம்.ஒவ்வொருநினைவுகூரல் நிகழ்வுகளிலும் கெடுபிடிகளின் அளவு மட்டம் மட்டுமே மாறுகின்றது. ஆனால், கெடுபிடிகளோ கண்காணிப்புக்களோ இல்லாமல் இருந்ததில்லை" என்று குறிப்பிடுகிறார் ஊடகவியலாளர் குமணன்.

நில ஆக்கிரமிப்பைப் போலவே சிறுபான்மை மக்களை அடையாளப்படுத்தக்கூடிய மரபுரிமை சார் இடங்கள், நிலங்கள் மீது இராணுவமயப்படுத்தலின் ஒரு பகுதியாக பௌத்த ஆலயங்களை, சிலைகளை அமைப்பது கடந்த பத்தாண்டுகளில் அதிகரித்து வருகின்றது. தொல்லியல்சார் அரச திணைக்களங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை போன்ற இடங்களில் நடைபெற்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அறிக்கையிடுவது ஊடகவியலாளர்கள் களத்தில் மிகுந்த அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருக்கின்றார்கள். ஆக்கிரமிப்புக்களுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்கும் மக்களும் அதை ஆவணப்படுத்த முயலும் ஊடகவியலாளர்களும் அச்சுற்றுத்தப்பட்டும் வழமையாகிவிட்ட 'வீடியோ பதிவுகளும்' நடை பெறுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் போருக்குப் பிறகு அரசியல் மாற்றங்கள் பலவும் நிகழ்ந்தபோதிலும் சிறுபான்மை மக்கள் குரலற்றவர்களாகவும், இனவாதத்தின் கொடிய நகங்களால் அச்சுறுத்தப்பட்டுக்கொண்டுமே இருக்கின்றார்கள். இவ்விடத்தில் ஊடகத்துறையைப் பொறுத்த வரையிலும் சிறுபான்மை தரப்பு இன அடிப்படையான பாகுபடுத்தலுடனேயே அரசியல் அல்லது அதிகார தரப்பினால் நடத்தப்படுகின்றது. குறிப்பாக ஊடகவியலாளர்கள் 'புலிகள்' என்று சொல்லியே அச்சுறுத்தப்படுகின்றார்கள். கடந்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஊடகவியலாளர்கள்மீதானஒடுக்குமுறை, வன் செயல்கள் அவர்களைப் புலிகள் அல்லது புலி ஆதரவாளர்கள் என்றே அச்சுறுத்தப்பட்டார்கள். தற்பொழுதும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, நினைவு கூரல்கள் போன்றவற்றை அறிக்கையிடும் போதும் இதே மனநிலையுடனேயே ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப் படுகின்றார்கள்.

தமிழ் ஊடகவியலைப் பொறுத்த வரையில் சிங்கள ஊடகங்களைப் போலவே அரசியல் கொள்கைகள் சார்ந்த, கட்சிகள் சார்ந்த ஊடகங்களும் இயங்குகின்றன. எல்லா கட்சிகளும் தங்களுக்கென்று இணைய, அச்சு, இலத்திரணியல் ஊடகங்களை நடாத்திக்கொண்டிருக்கின்றன. அதே வேளை சுயாதீனமான ஊடகங்களும் இயங்கி வருகின்றன. சுயாதீனமாக இயங்கக்கூடிய ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு பற்றி, அல்லது நடைமுறையில் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள், விசாரணைகள் முதலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்குரிய பாதுகாப்பு, சட்ட உதவிகள் ஆலோசனைகள் எவ்வாறு கிடைக்கின்றது என்பது பற்றி இவ் ஊடகவியலாளர்களிடம் வினவியிருந்தோம்.

"தேசிய அளவில் இயங்கக்கூடிய ஊடகவியல் அமைப்புக்கள், உள்ளூர் ஊடகவியல் அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் சில சட்டத்தரணிகள், அவர்கள் சார் அமைப்புக்கள் பிரச்சினைகளின் போது குரல்கொடுக்கவும் ஆலோசனைகளை வழங்கவும் செய்கின்றன" என்பதை உறுதிப்படுத்தினார்கள். ஆயினும், எல்லா ஊடகவியலாளர்களுக்கும் இவ்வாறான உதவிகள் கிடைக்கின்றதா என்ற கேள்வி இருப்பதாக குமணன் சுட்டிக்காட்டினார். குறிப்பாக சுயாதீனமாக இயங்கக்கூடிய, அவ்வளவு பொது வெளியில் அறியப்படாத ஊடகவியலாளர்கள் எந்தவித சிவில் அமைப்புக்களினதோ, சுயாதீன அமைப்புக்களினதோ, தொழிற் சங்கங்களினதோ உதவிகளுக்கு வெளியிலேயே அச்சுறுத்தலோடு இயங்கவேண்டியுள்ளதையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், ஊடகவியல்சார் தொழிற் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள் போன்றவை அரசோ அதன் அதிகாரமோ 'பயங்கரவாதிகள்' என்ற அச்சுறுத்தலைக் காட்டி கைதுகள், விசாரணைகளைச் செய்யும்போது பெரியளவில் வினைத்திறனாக ஒரு ஊடகவியலாளருடன் நிற்பது என்பதும் சந்தேகமே. ஒரு அளவுக்கு மேல் அவை ஊடகவியலாளர்களை 'கைவிடவே' செய்கின்றன. பொதுவில் மக்கள் ஒரு சில பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களையும் அதன் பெயர்களையும் மட்டுமே அறிந்திருக்கிறார்கள். அவர்கள் ஊடகவியலாளர்கள் பற்றி அறிந்ததும் சொற்பமானதே. குறிப்பாக பிரஜைகள் ஊடகவியல், இணைய ஊடகவியல் என்று வரும்போதும் மக்களின் அறிதலும், அச்சுறுத்தல்கள் வரும் போது அவர்களின் குரல்களும் அவ்வளவாக ஒலிப்பதில்லை. அரசியல் மயப்படாத 'பொதுப்புத்தி' தொடர்ந்தும் பெருமளவான மக்களிடம் இருந்து வருகின்றது. அரசியல் விழிப்புணர்வு, சமூக பங்குபற்றுதல் என்பவற்றில் ஒரு அங்கமாக ஊடகவியல் மீதான மக்களின் கரிசனையும் இருக்கவேண்டும். செய்திகளும், செய்தி அறிக்கைகளும் மக்களை அறிவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் ஆபத்தான உழைப்பாகும். மக்களை சமூகவயப்படுத்துதல், அரசியல் மயப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஊடகவியலின் பங்கு முக்கியமானது. முதலாளித்துவமும், எதேச்சதிகாரமும் உலகம் முழுவதும் ஊடகவியலை தங்களுடைய நலன்களுக்குள் இழுத்துக்கொண்டுவிட்டன. எஞ்சி இருக்கும் குறைவான 'அறமுள்ள' ஊடகவியல் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றது. ஊடக வியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் ஊடகவியலில் இருந்த அச்சுறுத்தல் அதன் பிறகு தணிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது நேரடியாக இயங்காமல் பல்வேறு தந்திரமான வழிமுறைகளில் இயங்குகின்றது. பயங்கரவாத அச்சுறுத்தல், பாது காப்பு என்பவற்றினைக் கொண்டு மக்களுக்கான ஜனநாயகக் குரலை ஒடுக்க முயற்சித்துக்கொண்டே இருக்கின்றது.

மக்களின் அரசியல் விழிப்புணர்வும் சமூக அக்கறையும் கூட்டுச்சேர்வதன் மூலமே ஊடகவியல் என்னும் ஜனநாயகத்தின் முக்கிய நெடுந்தூணை பாதுகாக்க முடியும். போருக்குப் பிறகு இன நல்லிணக்கம் மேம்படுத்தப்பட்டிருக்க வேண்டும். சிறுபான்மை, பெரும்பான்மை என்ற வேறுபாடுகளைக் கடந்து ஊடகவியலே முதலில் சமத்துவத்தையும் நல்லுறவையும் அடைந்திருக்க வேண்டும். ஒரே நாட்டில் சிங்கள ஊடகங்கள் ஒரு பக்க செய்தியையும் தமிழ் ஊடகங்கள் இன்னொரு பக்க செய்தியையும் அறிக்கையிடுகின்றன. சிறுபான்மை தரப்புக்களின் குரல்களை பெரும்பான்மை ஊடகங்கள் கவனப்படுத்தவேண்டும். சிறுபான்மை மக்களின் ஊடகவியலில் நடைபெறும் உரையாடல்கள், செய்திகளை அறிந்திருக்கவேண்டும். அதிகாரம் இனவாதத்தைப் பயன்படுத்தி தன்னை தக்கவைக்க முயற்சிக்கும் போது தேசிய அளவில் எல்லா ஊடகங்களும் அதற்கு எதிராக 'ஒரே குரலில்' பேச வேண்டும். ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படும் போது பெரும்பான்மை மக்களிடமிருந்தும், அவர்கள்சார் அமைப்புக்களிடமிருந்தும் கரங்கள் நீண்டுவந்து உதவிகளைச் செய்யவேண்டும். பெரும்பான்மை மக்களும் சிறுபான்மை மக்களும் உரையாடிக்கொள்ளவும், பரஸ்பரம் பிரச்சினைகளை, நியாயங்களை அறிந்துகொள்ளவுமான வெளியை ஊடகங்களும் அதுசார்ந்து இயங்கும் ஊடகவியலாளர்களுமே ஏற்படுத்த முடியும்.

---

**Dr.சி.சிவன்சுதன்**

**பொது வைத்திய நிபுணர் எழுதியது:**

பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம்பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும். இலகுவில் ஏமாறக்கூடிய மனம்படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனைமரங்கள் அமெரிக்கா தேசத்திலே வளருபவையாக இருந்திருந்தால் பனங் கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும். கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். நுங்குகளின் மகத்துவம் பேசப்பட்டிருக்கும். ஒடியல், புழுக்கொடியல், மாவகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும்.

ஆனால் பாவம் இந்தப் பனைமரங்கள் பாவப்பட்ட எம்மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது. பானங்களிலே அதிகூடிய புரதச்செறிவுடைய பானம் நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால் தான் புரதச்செறிவுடைய பானம் என்று நினைத்துக் கொள்கிறோம். 100g பாலிலே 3.3g புரதம் இருக்கிறது. ஆனால் 100g நுங்கிலே 10.8g புரதம் இருக்கிறது. பாலினைப்போல் 3 மடங்கு புரதச் செறிவுள்ள பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம்.

நுங்கினுடைய உலர்நிறையிலே 60% புரதமும் 30% மாப்பொருளும் இருப்பதுடன் மிகக்குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப்படுகிறது. பனங்கூடல்களுக்குள் வசிக்கும் எமது சிறார்கள் புரதக் குறைபாட்டினால் அவதியுறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த நுங்கின் மகத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. எம்மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் 5 வீதமான பனம்பழங்கள் கூட உபயோகப்படுத்தப்படுவதில்லை. வண்டு களிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.

புரதச்சத்து நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம்பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக்கொண்டிருக்கின்றன. பனம்பழங்களின் உலர்நிறையில் 11 வீதம் புரதமும் பெருமளவு பீட்டா (β) கரோட்டினும் ஏனைய விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப் பனம்பழங்களை மக்கள் விரும்பி உண்ணக்கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீடாக பனம் பழங்களிலிருந்து பலவகையான சுவையான பானங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனங்களி சேர்த்து சமைப்பதன் மூலம் அவற்றின் சுவையும் நிறமும் ஊட்டச்சத்தும் மெருகு பெறும் என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பனங்களிகளை இலகுவில் பிரித்தெடுப்பது, பாதுகாக்கும் பொறிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்.

பனம்பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புக்தன்மையும் விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின் நாம் பனம்பழங்களை ஈய உறைகளில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையும் ஏற்படலாம். பலவிதமான விளம்பர யுத்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் ஓட்ஸ் வகைகள் எமது அன்றாட உணவுகளில் ஒன்றாக மாறும் நிலை காணப்படுகிறது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் ஓட்ஸிலும் சிறந்த அதிக நார்த்தன்மை கொண்ட மலிவான இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம். பனங்கிழங்குகள் அதிகளவு நார்த்தன்மையும் மிகக்குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப்பதுடன் உலர்நிறையில் 12 வீத புரதத்தையும் பல விற்றமின்கள் கனியுப்புக்களையும் கொண்டிருக்கின்றன. பனங்கிழங்குகளில் இருக்கும் மாப்பொருளானது குறைந்த வேகத்திலே உடலினுள் அகத்து றிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாக காணப்படுகின்றது. பனம்பழங்களின் பயன்கள் அனைத்தையும் எடுத்த பின்பு அதன் கொட்டைகளை பனம்பாத்தி போடுவதன் மூலம் பனங்கிழங்குகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும். அத்துடன் பனங்கிழங்குகளை பதப்படுத்தி பனங்கிழங்குகளாகவே பாதுகாக்கும் பொறிமுறை கண்டறியப்பட வேண்டும்.

- முகப்புத்தகத்திலிருந்து...

# மூலிகைகளும் குழந்தைகளின் மருத்துவ சுக வாழ்வும்



படம் வரைந்தவர்:
குமரகுரு துளசிராம்

**டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

அரச பதிவு இலக்கம் - 10,294
மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி,
தெல்லிப்பளை.



குழந்தை வளர்ப்பு மிகப்பெரிய கலை, அதிலும் நோயில்லாத குழந்தையை வளர்த்தல் பெரிய கலையாகும். சித்த மருத்துவத்தில் காப்பு, நீக்கம், நிறைப்பு என்பன சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. காப்பு (Preventive) என்பது நோய் ஏற்படாமல் இருப்பதற்கு செய்யப்படும் உணவு மருந்துகளைக் குறிக்கும். நீக்கம் (Curative) என்பது வந்த நோயை நீக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்துகள், சிகிச்சை முறைகளைக் குறிக்கும். நிறைப்பு என்பது உடலில் குன்றிய சத்துக்களைச் சீர்ப்படுத்த, இழந்த சக்தியை நிறைவு செய்யவும் வழங்கப்படும் உணவு, மருந்துகளைக் கொண்டதாக அமையும்.

கிரந்திகொதியெண்ணைக் காப்பு மருத்துவமாகவும், தாமரை வளைய ஏலாதி மாத்திரை, மிருந்தியாதிக் குளிகை, அமுதாதிக் குளிகை, சென்னகரம்பழத்து நெய் அக்கர சஞ்சீவி மாத்திரை, கோரோ சனைக் குளிகை, பொடுதலைக் குளிகை, கஸ்தூரி மிருத்தி "யாதி, பிரமி நெய், பூசினிநெய், பொன்னாங்காணி நெய், செவ்வகத்தி நெய், சஞ்சீவியெண்ணெய், ஈருள்ளி யெண்ணெய் வாழைப்பூ நெய், செங்கத்தாறி யெண்ணெய், புங்கம் வேரெண்ணெய் மாது எம்பழத்து நெய் போன்ற பல மருந்துகள் "நீக்கம்" எனப்படும் குணப்படுத்தும் மருந்துகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மூலிகை இலைக்கஞ்சி, சத்துமாக் கஞ்சி என்பன உடலில் குன்றிய சத்துக்களை சீர்ப்படுத்த உதவும் நிறைப்பு முறையாகும். தமிழர் பாரம் பரியத்தில் மூலிகை முதலுதவிகளாக கை வைத்திய முறைகள் காலங் காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சித்த மருத்துவத்தில் மணி, மந்திரம், அவிழ்தம் என்பன சிறப்பாகக் கருதப்படுகின்றது. உடலை, உள்ளத்தை, ஆன்மாவைப் பிணிக்கும் பிணிகளை அவிழ்ப்பது அவிழ்தம் எனப்படும்.

அவிழ்தம் என்பது பிரதானமாக மருந்துகள் வழி சிகிச்சை செய்தலைக் குறிக்கும். மணி என்பது இறைசக்தி (Spiritual power) மூலம் சிகிச்சை செய்வது.

மந்திரம் என்பது மருத்துவரின் மனத் திறத்தையும் மனதின் தரத்தையும் குறிக்கும். இதற்கு தியானம், மந்திரச் சொல் (Sacred word), தவம், வழிபாடு மூலம் மனத்தைத் திடப்படுத்துவது, பார்வை பார்த்தல், மந்திர நீர் தெளித்தல், சோதிடம், திருநீறு இடல் என்பன உளச் சிகிச்சை முறைகளாகும்.

மந்திர ஒலி அதிர்வுகள் (Regular Rhythmic vibration through sacred words) மூலம் உள்ளத்தைச் சீர்ப்படுத்தும் முறைகள் தமிழர் மருத்துவத்தில் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றதைக் காணலாம்.

தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளுக்கு அதிமதுரப் பொடியை தாயின் மார்பில் பூசி தாய்ப்பாலூட்ட வேண்டும்.

சீறி சீறி அழும் குழந்தைக்கு சிறுதிப்பலி, சிறு தேக்குத் தூளைப் பசுநெய் சேர்த்து மார்பில் பூசி தாய்ப்பாலூட்ட வேண்டும்.

குழந்தைகளுக்கு ஏற்படும், சளி, முட்டு, இருமல், தடிமன், காய்ச்சல் ஆகிய நிலைகளில் சிறுவர் கோரோசனை மாத்திரையை இஞ்சிச்சாறு, கற்பூரவள்ளிச் சாறு, தேன், முலைப்பால், கற்கண்டுத் தூள், துளசிச்சாறு போன்றவற்றில் கொடுக்கலாம்.

கிரந்தி எண்ணெய் தேய்த்து காலை இளம் வெயிலில் விடும்போது விற்றமின் "டி" தொகுக்கப்பட்டு தசைப்பலம், எலும்புப்பலம் அதிகரிப்பதோடு நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கும்.

கிரந்தி எண்ணெய் சிறிதளவு உள்ளே கொடுத்தும் வெளியே பூசியும் விடுவர். இதனால் மலச்சிக்கல், மாந்தம் வராமல் தடுப்பதுடன் கிரந்தி அவியல், விரணம், கிரந்திச்சளி, சொடுகு, கடி. கிரந்தி முட்டு ஆகியன தீரும் உழுந்து எண்ணெய் தேய்த்து தசைகளைப் பிடித்து விடும் போதும் தசைப் பலம், என்புப் பலம் அதிகரிக்கும்.

மாந்தம் ஏற்படும் நிலையில் கைமருந்தாக மாந்தக் கருக்கு குடிநீரில் வேப்பங்காம்பு, ஓமம், கறிவேப்பிலைக் காம்பு, மஞ்சள் நுணா, உத்தமானிக் காம்பு. பொடு தலைக்காம்பு, ஒதியம் காம்பு, வசம்பு, மிளகு, உள்ளி, சீரக மருந்து அவித்துக் குடிப்பது தாய்மாருடைய வீட்டு வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் மாந்தத்தில் பொடுதலை மிக முக்கியமான மூலிகையாகும்.

சிறுவர்களுக்கு சளி. இருமல் ஏற்படும்போது கற்பூர வள்ளி, தூதுவளை, இஞ்சி, மிளகு, நற்சீரகம், கடுக்காய், வல்லாரை வகைக்கு ஒரு களஞ்சு வீதம் எடுத்து அரைப் போத்தல் நீர்விட்டுக் காற்பங்காகக் காய்ச்சி இரண்டு தேக்கரண்டி வீதம் கற்கண்டுத் தூள் சேர்த்து ஒரு நாளைக்கு மூன்று தடவை கொடுக்கலாம். இதில் கற்பூ ரவள்ளி, இஞ்சி, மிளகு, தூதுவளை சளியை நீக்க உதவும். குழந்தை உள்விழுங்கிய சளியை மலத்தினூடாக வெளிப்படுத்த கடுக்காய் உதவும்.

குழந்தைகளுக்கு திட உணவை கொடுக்கும் போதும், புதுப்புது உணவுகளை கொடுக்கும் போதும் மலச்சிக்கல் ஏற்படலாம்.

இரவில் தேங்காய்ப்பால் அரைத் தேக்கரண்டியை ஒரு தேக்கரண்டி வெந்நீரில் கலந்துகொடுக்கலாம். ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு நார்ச்சத்துள்ள காய்கறிகளைச் சிறிது சிறிதாக நன்கு பிசைந்து கொடுப்பதுடன் வெந்நீர் அதிகளவில் கொடுப்பதும் நன்று. திராட்சை வற்றலை வெந்நீரிலிட்டு ஆறிய பின்னர் கொடுக்கும் பொழுது மலக்கட்டு தீருவதைக் காண லாம்.

ஏடுகள், ஈழத்து சித்த மருத்துவ நூல்களிலுள்ள இலக்கியச் சுவை, உணர்ச்சியுடன் அமைந்த செய்யுள் நடை (Verse and Emotive prose) அறிவியல் உரை நடையில் (Scientific prose) எழுதி வெளியிடுவதும், மக்களிடம் அவை சென்றடைவதும் காலத்தின் கட்டாயமாகும்.

யாழ்பல்கலைக்கழக சித்தமருத்துவ துறையானது தமிழ் மருத்துவ அறிஞர்கள் வைத்திய கலாநிதிகள் அ.இராசரத்தினம், பூ.உரோமகேஸ்வரன் ஆகி யோருக்கு மதிப்புறு முனைவர் வழங்கி கௌரவிப்பதற்கான முயற்சி எடுக்கப்படாமை வேதனைக்குரியது. யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை பரராசசேகர பாலர் ரோக நிதானம், பால வாகடம் போன்ற நூல்களை ஆழமாகக் கற்பிக்கவேண்டும்.



# விளையாட்டு

## அடுத்த சீசனிலும் டோனி விளையாடுவார் - சுரேஷ்



நடப்பு ஐபிஎல் சீசனுடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டன் டோனி ஓய்வு பெற உள்ளதாக சொல்லப்பட்டு வருகிறது. இந்த சூழலில் 'டோனியின் ஐபிஎல் கிரிக்கெட் ஓய்வு சார்ந்த திட்டம் என்ன?' என்பது குறித்து சுரேஷ் ரெய்னா தகவல் ஒன்றை பகிர்ந்துள்ளார்.

'ஐபிஎல் கோப்பையை வென்ற பிறகு மேலும் ஒரு வருடம் விளையாடுவேன்' என டோனி தன்னிடம் தெரிவித்ததாக ரெய்னா தெரிவித்துள்ளார். அண்மையில் டோனியை சந்தித்த போது அவர் தன்னிடம் இதை பகிர்ந்து கொண்டதாக ரெய்னா தெரிவித்துள்ளார்.

டோனியின் இந்த வார்த்தைகள் சென்னை அணிக்காக 5-வது முறையாக ஐபிஎல் கோப்பையை வெல்லும் முடிவோடு அவர் இயங்கி வருவதை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

அண்மையில் லக்னோ அணிக்கு எதிரான லீக் போட்டியின் போது 'இது எனது கடைசி ஐபிஎல் சீசன் என நான் சொல்லவில்லை' என வர்ணனையாளரிடம் டோனி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2020 ஒகஸ்ட் 15 அன்று சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக டோனி அறிவித்தார். அது முதல் அவர் ஐபிஎல் கிரிக்கெட்டில் மட்டுமே விளையாடி வருகிறார். டோனியின் தலைமையின் கீழ் சர்வதேச கிரிக்கெட் மற்றும் ஐபிஎல் அரங்கில் அதிகம் விளையாடியவர் ரெய்னா.

## விதிகளை மீறியதற்காக பட்லருக்கு அபராதம்

ஐபிஎல் தொடரில் முன்னாள் சாம்பியன்கள் ராஜஸ்தான் ரோயல்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் பேட்டிங் ஆடிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 149 ரன்கள் மட்டுமே எடுத்தது. ராஜஸ்தான் தரப்பில் யுஸ்வேந்திர சாஹல் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

இதையடுத்து 150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய ராஜஸ்தான் அணி 13.1 ஓவர்களில் 1 விக்கெட்டை மட்டுமே இழந்து 151 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜெய்ஸ்வால் 47 பந்தில் 98 ரன்களும், சாம்சன் 29 பந்தில் 48 ரன்களும் எடுத்தனர். தொடக்க ஆட்டக்காரர் ஜோஸ் பட்லர் (0 ரன்) ரன் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

இந்நிலையில், ஐபிஎல் நடத்தை விதிகளை மீறியதற்காக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஜோஸ் பட்லருக்கு போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பட்லர் ரன் அவுட் ஆகி பெவிலியனுக்கு திரும்பிய போது கோபத்தில் பவுண்டரி எல்லைக்கோட்டை பேட்டால் அடித்தார்.

இதன் காரணமாக ஐபிஎல் நடத்தை விதிகளை மீறியதற்காக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஜோஸ் பட்லருக்கு போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக கூறப்படுகிறது.

ஐபிஎல் நடத்தை விதிகளின் கீழ் லெவல் 1 குற்றங்கள் பொதுவாக கிரிக்கெட் உபகரணங்கள், ஆடைகள் அல்லது மைதான பொருத்துதல்கள் மற்றும் பொருத்துதல்களை துஷ்பிரயோகம் செய்வதை உள்ளடக்கிய நடவடிக்கை அல்லது வாய்மொழி துஷ்பிரயோகம் மூலம் நடுவரின் முடிவில் எதிர்ப்பை வெளிப்படுத்துதல், ஆபாசமான, புண்படுத்தும், அல்லது அவமதிக்கும் மொழியைப் பயன்படுத்துதல் அல்லது ஒரு ஆபாசமான சைகை செய்தல் மற்றும் அதிகப்படியான கவர்ச்சியில் ஈடுபடுதல் அல்லது பெவிலியன் / டிரஸ்ஸிங் ரூம் ஷெட்களை நோக்கி ஆக்ரோஷமாக சைகை செய்தல் அல்லது ஆக்ரோஷமாக அல்லது ஏளனமாக செயல்படுதல் உள்ளிட்ட குற்றங்கள் லெவல் 1 குற்றங்களாக உள்ளதாக கூறப்படுகிறது.




## டி.வில்லியர்சை முந்திய ரோகித்

16-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. விறுவிறுப்பான கட்டத்தை எட்டி இருக்கும் இந்த போட்டி தொடரில் இன்னும் எந்த அணியும் பிளே-ஆப் சுற்றுக்கு முன்னேறவில்லை.



இதற்கிடையே, மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நடந்த 57-வது ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. டொஸ் வென்ற குஜராத் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி மும்பை அணி முதலில் பேட்டிங் செய்தது. கேப்டன் ரோகித் சர்மா 18 பந்துகளில் 29 ரன்கள் எடுத்தார். இதில் 3 பவுண்டரி . 2 சிக்சர்கள் அடித்தார்.

இந்த சிக்சர் மூலம் ஐபிஎல் தொடரில் அதிக சிக்சர்கள் அடித்தவர்கள் பட்டியலில் ஏ.பி.டிவில்லியர்ஸை பின்னுக்குத் தள்ளி ரோகித் சர்மா 2-வது இடம் பிடித்துள்ளார். ரோகித் சர்மா 234 போட்டியில் 252 சிக்சருடன் 2வது இடம் பிடித்துள்ளார். அதிக சிக்சர்கள் அடித்தவர்கள் பட்டியலில் கிறிஸ் கெயில் 141 போட்டியில் 357 சிக்சருடன் முதலிடத்தில் நீடிக்கிறார். டி.வில்லியர்ஸ் 170 போட்டிகளில் 251 சிக்சருடன் 3-வது இடத்தில் உள்ளார்.



## அயர்லாந்தை வீழ்த்திய பங்களாதேஷ்



அயர்லாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நடைபெற்றது. டொஸ் வென்ற பங்களாதேஷ் பவுலிங் தேர்வு செய்தது. மழை காரணமாக போட்டி 45 ஓவராகக் குறைக்கப்பட்டது. அதன்படி, முதலில் பேட் செய்த அயர்லாந்து நிர்ணயிக்கப்பட்ட 45 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 319 ரன்கள் குவித்தது.

அந்த அணியின் ஹாரி டெக்டர் பொறுப்புடன் ஆடி சதமடித்தார். அவர் 112 பந்தில் 10 சிக்சர் உள்பட 140 ரன்கள் எடுத்தார். கடைசி கட்டத்தில் அதிரடியாக ஆடிய டாக்ரெல் 47 பந்தில் 74 ரன்கள் குவித்தார். இதையடுத்து, 320 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் களமிறங்கியது.

நஜ்மல் ஹொஸைன் சிறப்பாக ஆடி சதமடித்து 117 ரன்னில் அவுட்டானார். தவ்ஹித் ஹிர்தோய் 68 ரன்கள் சேர்த்தார். இறுதியில், ஆட்டத்தின் கடைசி ஓவரில் பங்களாதேஷ் 7 விக்கெட் இழப்புக்கு 320 ரன்கள் எடுத்து வென்றது. இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்களாதேஷ் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

## ஹோப் தலைமையிலான வெஸ்ட் இண்டீஸ் அணி அறிவிப்பு

ஒருநாள் உலக கோப்பை தொடர் இந்த ஆண்டு இந்தியாவில் நடக்கிறது. இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இங்கிலாந்து, வங்கதேசம் ஆகிய அணிகள் நேரடியாக உலக கோப்பைக்கு தகுதிபெற்ற நிலையில், முன்னணி அணிகளில் ஒன்றான வெஸ்ட் இண்டீஸ் தகுதிச்சுற்றில் ஆடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

1975 மற்று 1979-ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக 2 ஒருநாள் உலக கோப்பைகளை வென்றதுடன், டி20 உலக கோப்பையையும் 2 முறை வென்று உலகின் முன்னணி அணிகளில் ஒன்றாக திகழும் வெஸ்ட் இண்டீஸ் அணி, உலக கோப்பைக்கு நேரடியாக தகுதி பெறாததே பெரும் பின்னடைவுதான்.

இந்த ஆண்டு இந்தியாவில் நடக்கும் உலக கோப்பைக்கு தகுதிபெற வெஸ்ட் இண்டீஸ் அணி தகுதிச்சுற்றில் ஆடவேண்டியுள்ள நிலையில், தகுதிச்சுற்றுக்கான ஷேய் ஹோப் தலைமையிலான வெஸ்ட் இண்டீஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஷேய் ஹோப் (கேப்டன்), ரோவ்மன் பவல், ஷமர் ப்ரூக்ஸ், யானிக் காரியா, கீஸி கார்ட்டி, ரோஸ்டான் சேஸ், ஜேசன் ஹோல்டர், அகீல் ஹூசைன், அல்ஸாரி ஜோச.்.ப், பிரண்டன் கிங், கைல் மேயர்ஸ், குடகேஷ் மோட்டி, கீமோ பால், நிகோலஸ் பூரன், ரொமாரியோ ஷெ.்.பெர்ட்.

## ஒருநாள் தரவரிசைப் பட்டியல் வெளியீடு

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலான ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையை வெளியிட்டது. இதில், இந்தியா மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா தனது புள்ளிப்பட்டியலில் 113-ல் இருந்து 118 ஆக உயர்த்தியது. பாகிஸ்தான் (116 ரேட்டிங்) மற்றும் இந்தியா (115 ரேட்டிங்) ஆகியவற்றில் 2-வது மற்றும் 3-வது இடங்களில் உள்ளன.

பாகிஸ்தான் 3-வது இடத்தில் தான் இருந்தது. சமீபத்தில் நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் அந்த அணி ஜெயித்ததை தொடர்ந்து 2-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. நியூசிலாந்தை பாகிஸ்தான் ஒயிட் வாஷ் செய்திருந்தால் அந்த அணி முதலிடத்தை பிடித்திருக்கும்.

நியூசிலாந்து 104 ரேட்டிங்குடன் 4-வது இடத்திலும், இங்கிலாந்து 101 ரேங்கிங்குடன் 5-வது இடத்திலும் உள்ளன. தென் ஆப்பிரிக்கா, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், இலங்கை, வெஸ்ட் இண்டீஸ் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றன.

டி20 தரவரிசையை பொறுத்தவரை இந்தியா முதலிடத்தில் உள்ளது. இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. டெஸ்ட் தரவரிசையிலும் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து ஆகிய அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

# உலக வலம்

## அமெரிக்காவில் அமுலுக்கு வரும் புதிய சட்ட விதிகள்



அமெரிக்க எல்லையில் அமுலில் இருந்த விதி 42 என்ற கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளதுடன் புதிய கடுமையான சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய புகலிட விதிகள் சட்டவிரோதமாக கடக்க முன்னெடுக்கும் முயற்சிகளை தடுக்கும் என்றே நம்பப்படுகிறது. மெக்சிகோ எல்லையில் பல புலம்பெயர்ந்தோரை தடுத்து நிறுத்திய கொரோனா கால எல்லைக் கட்டுப்பாடு விதிகளை அமெரிக்கா முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

அத்துடன் புதிய கடுமையான விதிகளை அமுலுக்கும் கொண்டுவந்துள்ளது. இதனால் சட்டவிரோதமாக அமெரிக்கா விற்குள் நுழையும் எவரும் நீண்ட கால தடை மற்றும் சாத்தியமான குற்றவியல் நடவடிக்கைகளை எதிர்கொள்வார்கள் என்றே கூறப்படுகிறது. எல்லைகள் மூடப்பட்டுள்ளது என அறிவித்துள்ள அதிகாரிகள், ரோந்து பணிகளுக்காக 24,000 எல்லை ரோந்து முகவர்கள் மற்றும் அதிகாரிகளை அனுப்பி வைத்துள்ளது. மேலும், தற்போது முதல் சட்டப்பூர்வமான வழியைப் பயன்படுத்தாமல் எல்லைக்கு வருபவர்கள் புகலிடம் பெறத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள் எனவும் அறிவித்துள்ளனர்.

மட்டுமன்றி, அமெரிக்காவில் இருக்க சட்டப்பூர்வ அடிப்படை இல்லாதவர்களிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளவும், அவர்களை நீக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் எனவும் அதிகாரிகள் தரப்பு தெரிவித்துள்ளது. ஆனால் இந்த புதிய சட்டம் அமுலுக்கு வரும் சில மணி நேரம் முன்னர், ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோர் ஆறுகள் வழியாகவும், சுவர்களில் ஏறி குதித்தும் அமெரிக்க மண்ணில் நுழைந்துள்ளதாக கூறப்படுகிறது.

### புலம்பெயர் மக்கள் குழப்பத்தில்

இதனிடையே, எல் பாசோ நகரில் முகாமிட்டுள்ள நூற்றுக்கணக்கான புலம்பெயர் மக்கள் அடுத்து எங்கே செல்வது என்பது தொடர்பில் குழப்பத்தில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. சமீபத்திய நாட்களில் மட்டும் அமெரிக்க எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் தரப்பு 28,000 புலம்பெயர் மக்களை தங்கள் முகாம்களில் தங்க வைத்துள்ளனர். எல்லையில் மனிதாபிமானத்துடன் செயல்படும் சூழலை உருவாக்குவதாக பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டாலும், விதி எண் 42 என்ற டொனால்ட் டிரம்ப் காலத்து கொள்கையானது நீதிமன்ற விசாரணைக்கும் கடும் விமர்சனத்திற்கும் இலக்கானது.

தொடர்புடைய விதியால் தஞ்சம் கோரும் மக்கள் உட்பட புலம்பெயர்ந்தோரை உடனடியாக வெளியேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. தற்போது ஜோ பைடன் நிர்வாகம் அமுலுக்கு கொண்டுவந்துள்ள விதிகளின்படி, பிற நாடுகளின் எல்லைகளை பயன்படுத்தி அமெரிக்காவுக்குள் நுழைய முயற்சிக்கும் பெரும்பாலான புலம்பெயர்ந்தோர் புகலிடம் பெற தகுதியற்றவர்கள். மட்டுமன்றி, உரிய சட்டபூர்வமான வழிகளை பின்பற்ற தவறினாலும், அவர்களுக்கும் புகலிட வாய்ப்பு மறுக்கப்படும்.

## தீவிரவாதியை பயங்கரவாத பட்டியலில் சேர்க்க எதிர்ப்பு



பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத அமைப்பின் தீவிரவாதி அப்துல் ரவூப் அசார். இவர் அந்த அமைப்பின் தலைவர் மசூத் அசாரின் சகோதரர் ஆவார். தீவிரவாதி அப்துல் ரவூப், 1999-ம் ஆண்டு இந்திய விமான கடத்தல், 2001-ம் ஆண்டு இந்திய பாராளுமன்றம் மீதான தாக்குதல் உள்ளிட்ட பல பயங்கரவாத தாக்குதல்களை திட்டமிட்டு செயல்படுத்துவதில் ஈடுபட்டார்.

இந்நிலையில் தீவிரவாதி அப்துல் ரவூப் அசாரை பயங்கரவாத தடை பட்டியலில் சேர்க்க ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா தீர்மானம் கொண்டு வந்தது. ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் 1267 ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் அல்கொய்தா தடைகள் பட்டியலில் அப்துல் ரவூப்பை சேர்க்க இந்தியா தனது முன் மொழிவை வைத்தது. இதற்கு பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்படும் சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவும், அமெரிக்காவும் தீவிரவாதி அப்துல் ரவூப் அசாரை சர்வதேச பயங்கரவாதியாக அறிவிக்கும் தீர்மானம் கொண்டு வந்தன. இதை சீனா தனது வீட்டோ அதிகாரம் மூலம் நிறுத்தியது. இதற்கு முன்பும் பல பாகிஸ்தான் தீவிரவாதிக்கு எதிராக தீர்மானங்களை சீனா நிறுத்தி வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியாவில் மாணவர்களுக்கு விசா மறுப்பு




பிரித்தானியப் பல்கலைக் கழகங்களில் பயிலும் சர்வதேச முதுகலை மாணவர்களில் குடும்ப உறுப்பினர்கள் சேர்வதைத் தடுக்கும் திட்டங்களுடன், பிரித்தானியாவில் குடியேறுவதைத் தடுக்க அரசாங்கம் திட்டங்களை வகுத்து வருகிறது. கடந்த மிக சிறிய காலப்பகுதிக்குள் குடியேற்றியவர்களின் எண்ணிக்கையில் அதிக சாதனையைக் கண்ட பிறகு, பிரித்தானியா நிகர இடம்பெயர்வுகளைக் குறைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுக்க திட்டமிட்டுள்ளது.

கடந்த நவம்பரில் வெளியிடப்பட்ட சமீபத்திய புள்ளிவிவரங்களுக்கமைய, 2022ஆம் ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் 504,000 பேர் பிரித்தானியாவிற்கு குடியேறியுள்ளனர். பிரெக்சிட்டுக்கு முந்தைய குடியேற்ற நிலைகளில் இருந்து இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பெரும்பாலான குடியேறியவர்கள் ஐரோப்பிய ஒன்றியம் அல்லாத நாடுகளில் இருந்து வருகிறார்கள். அந்த நேரத்தில், உள்துறைச் செயலர் சுயெல்லா பிராவர்மேன், எல்லைகளைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் "தோல்வியடைந்துவிட்டது" என்பதை ஒப்புக்கொண்டு, சிக்கலைச் சரிசெய்வதில் "முற்றிலும் உறுதியாக" இருப்பதாகக் கூறினார். 2022ஆம் ஆண்டில் இங்கிலாந்து அதிகாரிகளால் கிட்டத்தட்ட 500,000 கற்கை விசாக்கள் வழங்கப்பட்ட நிலையில், கோவிட்க்குப் பிந்தைய இடம்பெயர்வு அதிகரிப்பிற்கு மாணவர்கள் முக்கிய காரணியாக உள்ளனர்.

மாணவர்கள், குறிப்பாக நைஜீரியா மற்றும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள், தங்களுடன் குடும்பத்தை அழைத்து வருவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. இதனால் மாணவர்களில் குடும்ப உறுப்பினர்கள் சேர்வதைத் தடுக்கும் திட்டங்களுடன், பிரித்தானியாவில் குடியேறுவதைத் தடுக்க அரசாங்கம் திட்டங்களை வகுத்து வருகிறது.

## ஈரானில் 42 பேருக்கு மரண தண்டனை



ஈரானில் கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 42 கைதிகள் தூக்கிலிடப்பட்டனர் என்று மனித உரிமைகள் குழு ஒன்று கூறியுள்ளது. ஈரான் நாட்டில் கடுங்குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தூக்கிலிடப்படுகின்றனர்.

அதனால் ஈரான் அரசு நிர்வாகத்தை மனித உரிமை அமைப்புகள் கண்டித்து வருகின்றன. அந்நாட்டில் செயல்படும் ஈரான் மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், 'ஈரான் அரசு இந்தாண்டில் மட்டும் இதுவரை 194 பேரை தூக்கிலிட்டு கொன்றுள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 42 கைதிகள் தூக்கிலிடப்பட்டனர். இவர்களில் பாதி பேர் ஈரான் - பாகிஸ்தான் எல்லையில் உள்ள பலுசிஸ்தான் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தூக்கிலிடப்பட்ட 42 கைதிகளில் பெரும்பாலானோர் போதைப்பொருள் குற்றச்சாட்டின் கீழ் தண்டனை பெற்றவர்கள் ஆவர். கடந்த 10 நாட்களில் மட்டும் சராசரியாக ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் ஒருவர் தூக்கிலிடப்பட்டுள்ளார்' என்று தெரிவித்துள்ளது. முன்னதாக ஈரானின் முன்னாள் துணை பாதுகாப்பு அமைச்சர் அலிரெசா அக்பரி, இங்கிலாந்து நாட்டிற்கு ஈரானின் அணுசக்தி இரகசியங்களை வழங்கிய குற்றச்சாட்டின் கீழ் ஜனவரி மாதம் தூக்கிலிடப்பட்டார். கடந்த 2022ஆம் ஆண்டில் மட்டும் 582 கைதிகளை தூக்கிலிட்டதாக ஐ.எச்.ஆர் கூறுகிறது. அதேவேளை 2021ஆம் ஆண்டில், 333 கைதிகள் தூக்கிலிடப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

## இம்ரான் கானுக்குப் பிணை வழங்கப்பட்டது

*பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் 2 வாரம் பிணை வழங்கி உத்தரவிட்டது. இம்ரான் கானை கைது செய்தது சட்டவிரோதம் என பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் கூறிய நிலையில் தற்போது அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.*

*பாகிஸ்தானில் கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு, தெஹ்ரீன்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் தலைவரும், முன்னாள் கிரிக்கெட் நட்சத்திரமுமான இம்ரான் கான் தலைமையில் கூட்டணி அரசு அமைந்தது. எனினும், பாராளுமன்றத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் இம்ரான் கான் தோல்வியடைந்து, பிரதமர் பதவியை இழந்தார்.*



*அதற்குப் பிறகு, பாகிஸ்தானின் பல்வேறு நீதிமன்றங்களில் இம்ரான் கான் மீது ஊழல் முதல் தேசத் துரோகம், பயங்கரவாதம் வரை பல்வேறு குற்றப் பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்குகளில் அவருக்கு எதிராக பிணையில் வெளிவர முடியாத பல கைது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.*

*இருந்தாலும், பொலிஸாரால் கைது செய்யப்படுவதில் இருந்து இம்ரான் கான் தொடர்ந்து தப்பி வந்தார். நீதிமன்றங்களில் பிணை பெறுவதால் மட்டுமின்றி, இம்ரானைக் கைது பொலிஸார் கைது செய்யவிடாமல் அவரது இல்லத்தைச் சுற்றிலும் பிடிஐ கட்சி ஆதரவாளர்கள் கலவரத்தில் ஈடுபட்டு வந்ததாலும் அவரைக் கைது செய்ய முடியாத நிலை நீடித்து வந்தது.*

*இந்த நிலையில், இஸ்லாமாத் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இரு ஊழல் வழக்குகளில் பிணை பெறுவதற்காக இம்ரான் கான் நீதிமன்ற வளாகத்துக்கு செவ்வாய்க்கிழமை வந்தார். இந்த நிலையில், யாரும் எதிர்பாராதவிதமாக அவரை தேசிய ஊழல் தடுப்புப் பிரிவினர் அந்த வளாகத்தில் கைது செய்தனர். அவர்களுக்கு ஆதரவாக பாகிஸ்தான் துணை ராணுவப் படையான ரேஞ்சர்களும் இம்ரானை சுற்றிவளைத்து கவச வாகனத்தில் ஏற்றினர்.*

*இந்த சம்பவம், அந்தப் பகுதியில் மிகப் பெரிய பதற்றத்தை ஏற்படுத்தியது. இம்ரான் கானைக் கைது செய்ய விடாமல் அவரது ஆதரவாளர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டாலும், அவரை பொலிஸாரும், துணை ராணுவமும் அங்கிருந்து வாகனத்தில் அழைத்துச் சென்றன. தற்போதைய நிலவரப்படி இம்ரான் கானுக்கு எதிராக 140 க்கு மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.*













இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 14.05.2023 அன்று வெளியிடப்பட்டது.